# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, தை 1 உ (14—1—73) ஞாயிறு ஜூலியஸ் 8 | புத்தகம் 26 இதழ் 6


## தமிழ்ப் பொங்கல்!

சோலையிலே வாடியுதிர் பூக்கள் போன்று
சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருக்கும் நம்மைக்
காலையிலே எழுப்புகின்ற சேவலுக்கும்
கனிகொடுக்கும் மரங்களுக்கும் மாடு கட்கும்
நீலமணிகளாலுக்கும் உழவர் கட்கும்
நீருக்கும் நெல்லுக்கும் நன்றி கூறி
மூலபலம் குன்றாக தமிழ் பண்பாடி
மூந்து தமிழ்ப் பொங்கலின்று மகிழுவோம் வாரீர்!

—கவிஞர் சுரதா

# பொலீஸ் துறையில் தமிழர் புறக்கணிப்பு!

## புள்ளிவிபரம் தரும் உண்மை!

முக்கூட்டு முன்னணி ஆட்சி பீடமேறிய 1970-ம் ஆண்டு மே மாதத்திலிருந்து, ஏனைய துறைகளைப் போலவே பொலிஸ்துறையிலும் தமிழர்களுக்கு நியமனம் வழங்குவதில்கடைந்தெடுத்த பாரபட்சம் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதென்ற உண்மை இப்போது அம்பலமாகியுள்ளது.

தேசியப் பேரவையில் இது சம்பந்தமாகப் பிரதமரிடம் பண்டிதர் எழுப்பியிருந்த கேள்விக்கு அளிக்கப்பட்டுள்ள பதில், ஆட்சியாளரின் தமிழர் ஒதுக்குக்கொள்கையை வெட்டவெளிச்சமாக்கி விட்டது.

1970ம் ஆண்டு மே மாதத்திலிருந்து இன்று வரை இலங்கை பொலீஸ்படைக்கு சப்இன்ஸ்பெக்டர்களாகவும் உதவிசுப்ரின்டெண்டுகளாகவும் (A. S. P.) நியமனம் வழங்கப்பட்டவர்களில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எத்தனைபேர் என்பதையும் இதற்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்களிடமிருந்து எத்தனை விண்ணப்பங்கள் வந்தன என்பதையும், இந்நியமனங்களுக்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எத்தனை வீதமானோர் நியமிக்கப்பட்டனர் என்பதையும் தெரிவிக்குமாறு பண்டிதர் கோரியிருந்தார்.

இதற்குத் தரப்பட்டுள்ள விடை வருமாறு:-

1970ம் ஆண்டு மே திங்கள் தொடக்கம் இன்று வரை இலங்கை பொலீஸ் படைக்கு நியமிக்கப்பட்ட உதவி இன்ஸ்பெக்டர்கள் — சிங்களவர் 228, தமிழர்—23, முஸ்லிம் —9.

இதற்கு கிடைத்த விண்ணப்பங்கள் — சிங்களவர்கள் 4512—தமிழர் 1159—முஸ்லிம்கள்—323.

உதவி இன்ஸ்பெக்டர் நியமனம் நடைபெற்ற வீதாசாரம்—சிங்களவர்—5 வீதம் —தமிழர் 2 வீதம்—முஸ்லிம்கள 2.5 வீதம்.

உதவி சுப்பிரின்டெண்டுகள் (A. S. P.) 1970 மே மாதத்திலிருந்து இன்று வரை நியமிக்கப்பட்ட விபரம்:— சிங்களவர்—13, தமிழர்—1, முஸ்லிம்கள்—0.

## குமாரசூரியரின் முகத்திரையை கிழித்தெறிந்த பற்றுச்சீட்டு இதுதான்!



தமிழ் மொழி இந்நாட்டில் ஏற்கெனவே அனுபவித்து வந்த உரிமைகளைக்கூட இன்றைய அரசு மறுத்து வருகிறது — தமிழரான செல்லையா குமாரசூரியரின் தலைமையிலான தபாலமைச்சு தமிழ் மொழி உரிமையைப் பறிப்பதில் முன்னணி வகிக்கிறது.

இதை நிரூபிக்கும் வகையில் 2-1-73ல் தேசிய அரசுப் பேரவையில் போதிய சான்றுகளை பண்டிதர் இரத்தினம் சமர்ப்பித்தார். 1970ம் ஆண்டு, தமிழில் முகவரியிட்ட பதிவுக் கடிதங்களுக்கு வெள்ளவத்தை அஞ்சல் நிலையத்தினால் தமக்கு தமிழில் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டின் 'போட்டோஸ்ராட்' படத்தை சபையில் சமர்ப்பித்து — இப்போது தமிழில் பற்றுச் சீட்டு வழங்க அஞ்சலகங்கள் மறுத்து வருவதை எடுத்துக்காட்டி, குமாரசூரியரின் முகத்திரையை கிழித்தெறிந்தார் பண்டிதர்.

அந்தப் பற்றுச்சீட்டின் புகைப் படத்தையே மேலே காண்கிறீர்கள்.

இப்பற்றுச்சீட்டை சமர்ப்பித்து திரு. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

வெள்ளவத்தை அஞ்சல் நிலையம் கொழும்பு செயலக அஞ்சல் நிலையம் முதலியன தமிழில் பற்றுச் சீட்டுத் தருவதில்லை என்பதை சென்ற மாதம் 13ம் திகதி ஒத்திவைப்பின் போது நான் மாண்புமிகு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தருகின்ற பற்றுச் சீட்டுக்களைத் தமிழில் தருமாறு பணிக்க வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் நேர் மறுமொழி கூறுமல் சமாளித்துத் தப்பி விடமுயன்றார்.

'கௌரவ உறுப்பினர் இப்போது ஆச்சரியத்தைத் தரும் விஷயம் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். பற்றுச் சீட்டுப் போன்ற சில தஸ்தாவேசுகள் கடந்த காலத்தில் அவருக்குத் தமிழில் வழங்

(7-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகர் தமிழர் தீக்குளிப்பு!

மட்டுநகர் கோவிந்தன் வீதியைச் சேர்ந்த பாஸ்கரன் சபாபதி என்பவர் கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகைக்கு முன் தனக்குத் தானே தீமூட்டி உயிரை இழந்தார். இச்சம்பவம் 9-1-73 காலை 8.30 மணிக்கு நடைபெற்றது.

தமிழ் மக்கள்
அனைவருக்கும்
எமது
இதயங் கனிந்த
பொங்கல்— தமிழ்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

— ஆர்.

## தலைவர்கள் தரும் பொங்கல் விருந்து!

பொங்கல் திருநாள் தமிழர்களின் ஒரு பெரிய தினம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் நாள். உரிமைக்கும், உழைப்புக்கும் பெருமை சேர்க்கும் திருநாள்.

இந்நாட்டின் வாழ்வுக்கும் வளத்துக்கும் பாடுபட்டுழைத்த — உழைத்து வரும் தமிழர்கள் இன்று உரிமை பறிக்கப்பட்டு அரசியலில் அடிமைகளாக்கப் பட்டுள்ளனர். தமிழினத்தின் மீது சிங்கள இனம் ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கிறது இந்த நிலையில், தமிழர்கள் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் எப்படி கொண்டாடுவது?

தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி, சொந்த ஆட்சியை நிறுவி, சுதந்திரத்தை பெற்ற பின்புதான் ஈழத்தில் தமிழினம் தலைநிமிர்ந்து வாழ முடியும்! அதன் பின்னர்தான தமிழ் மக்கள் பொங்கல் திருநாளை உள்ள நிறைவுடன் கொண்டாட முடியும்.

அந்த நிலையை அடைய உழைப்பதற்கு தமிழினம் பொங்கல் புதுநாளில் — தமிழர் புத்தாண்டில் சபதம் எடுக்குமாக.

— தந்தை செல்வா.

★



பொங்கல் விழா — உழைப்புக்கு எடுக்கும் விழா. உழைத்தவனே உரிமைகளை அனுபவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற திருநாள். ஆனால் இந்நாட்டிலோ, இந்நாட்டின் வளத்துக்காக உழைத்த — உழைத்துக்கொண்டிருக்கும் பன்னிரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள், அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கொடுமை நிகழ்கிறது.

தமிழர்களின், மொழி, இன கலாசார உரிமைகள் புதிய அரசியல் திட்டத்தின் கீழ மறுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தமிழர் கூட்டணியாக இணைந்துள்ள இலங்கை வாழ் தமிழ் மக்கள், ஒன்றுபட்டு, இந்த ஆண்டு செயலில் இறங்க தயாராக இருக்கவேண்டும்.

பொங்கும் மங்கலம்
எங்கும் தங்குக —
தமிழும் தமிழினமும்
தழைத்தோங்குக!

திரு. எஸ். தொண்டமான்.

★



இதற்கு முன் வந்த பொங்கல் திருநாட்களை விட இந்த ஆண்டுப் பொங்கல் ஈழத் தமிழினத்துக்கு இனிப்பானது என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் கட்சி ரீதியாகவும், மதரீதியாகவும், பிரதேச ரீதியாகவும், சாதி ரீதியாகவும் சிதறிப் பிரிந்து சின்னபின்னப்பட்டுக் கிடந்த ஈழத் தமிழர்கள் ஒரு கொடியின் கீழ், ஓர் அணியின் கீழ் — ஒரு இலட்சியத்தின் கீழ் ஒன்றுபட்டிருக்கும் நிலையில் இந்த ஆண்டுப் பொங்கல் வந்திருக்கிறது.

இந்த ஆண்டு ஒற்றுமைப் பொங்கல் பொங்கும் நாம் அடுத்த ஆண்டு உரிமைப் பொங்கல் — சுதந்திரப் பொங்கல் பொங்க உறுதியெடுப்போமாக.

— மு. சிவசிதம்பரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

# தமிழ் மொழியின் தனிச் சிறப்பு!

டாக்டர் கி. கருணாகரன் எம். ஏ. பி. எச். டி,
(மொழியியல்துறை—அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

மொழிகளை ஆராயும் கலை மிகவும் பழமையான ஒன்றாகும். மொழிகளை அன்றும் ஆராய்ந்தார்கள் - இன்றும் ஆராய்கிறார்கள் — ஆராய்ந்து வருகிறார்கள். இந்த நூற்றாண்டில் அறிவியல் அடிப்படையிலான மொழியியலின் ஒப்பற்ற நல் வளர்ச்சி மொழிகளைப் பற்றிய ஆய்வுக்குப் புது ஒளியும் மெருகும் கொடுத்து வருகிறதென்பதில் சிறிதும் ஐயமில்லை.

மனித மொழியின் அமைப்பு மிகவும் சிக்கல் வாய்ந்த ஒரு அமைப்பு ஆகும். மொழியின் எப்பகுதியை எடுத்து அலசி ஆராய்ந்து பார்த்தாலும் அப்பகுதியின் உறுப்புக்கள் ஒன்றினுள் ஒன்றாய், ஒன்றினுள் பலவாய் அடங்கி முழுமை பெற்று விளங்குவதை நாம் காணமுடிகிறது. இந்த முழுமைக்குள் ஒரு ஒழுங்குமுறை இருப்பதையும் நாம் காணமுடிகிறது. அதன் உறுப்புக்கள் தனித் தனியாக இருக்கும். ஆனால் பயன்படும்போதோ அவை ஒருமையாய் இயங்கும்.

## மொழியின் சிறப்பு

மனித நாகரீகம் மொழி இல்லாவிட்டால் இல்லை. மனிதன் வாழ்ந்ததும், வாழ்ந்து வருவதும், வாழப் போவதும் மொழியாலே தான். மனிதனின் பழங்காலச் சிந்தனைகளும் படைப்புக்களும் இன்றும் நின்று நிலவி வளங்கொழிக்கும் கருத்துக்களை வாழச்செய்வதற்கு உதவுவதும மொழியேதான். மனித இனம் மொழியின அடிப்படையில்தான் தனித்தனிச் சமுதாயங்களாகப் பிரிந்து இயங்குகிறது. மொழி தன்னுடைய பேச்சு முறையிலும் எழுத்து வடிவிலும் மனித வாழ்வோடு இணைந்துள்ளது. இதன் வளர்ச்சி மனித நாகரீகத்தின் வளர்ச்சியோடும் வாழ்வோடும் இரண்டறப் பிணைந்துள்ளது.

இவ்வாறு இரண்டறப் பிணைந்துள்ள மொழியை முன்பும் ஆராய்ந்தார்கள் — இன்றும் ஆராய்ந்து வருகிறார்கள். உலகத்தில் தெளிவாக மொழியைப் பற்றி ஆராய்ந்த பெருமை இந்தியாவுக்குண்டு. அதிலும் குறிப்பாகத் தமிழகத்திற்கு நிறைய உண்டு. விஞ்ஞானபூர்வமாக முன்பு மொழியை அலசி ஆராய்ந்துள்ளார்கள். இன்றும் நிலைத்து நிற்கக்கூடிய வழிவகைகளைச் சொல்லி உள்ளார்கள். என்றாலும் காலத்தின் போக்கு எல்லாவற்றையும் புதுமை இழக்கச் செய்துவிடுகிறது அல்லவா? தொல்காப்பியரும் பாணினியும் ஏற்றி வைத்த மொழி ஆராய்ச்சி விளக்கைப் பலர் நெடுந்தொலைவு வரை சுமந்து வந்திருந்தாலும், அந்த ஒளி விளக்கிற்கு ஒளியூட்டிப் பெருமை அடையச் செய்வதற்கு இன்றைய அறிவியல் அடிப்படையிலான மொழியியல் ஆராய்ச்சியே மிகவும் பயன்படுகிறது — பயன்படுத்தப்பட்டு வருகிறது எனலாம்.

மொழியால் மனிதன் சிந்திக்கிறான். மொழியால் மனிதன் எழுதுகிறான் மொழியால் மனிதன் பேசுகிறான். இம்மூன்றுமே ஒரு மொழியைப் பற்றிய படிப்புக்கு — ஆராய்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவை தான். என்றாலும் பேச்சையே மொழியியலார் மிகவும் சிறப்பாக எடுத்துக்கையாளுகிறார்கள். பேசுவதற்கு முந்தியது சிந்தனை; பேச்சுக்குப் பிந்தியது செயல். செயலுக்கு அடுத்தவை மனிதனின் மற்ற சிந்தனைகள். ஆகவே சுருங்கக் கூறின் மொழி ஒரு சங்கிலித் தொடர்பு கிரியை ஆகும். இச் சங்கிலித் தொடர்பில் நடுநாயகமானது பேச்சு ஆகும். அந்தப் பேச்சு ஒலி வடிவமானது. ஒலிகள் இல்லையேல் அவற்றிற்கான குறியீடுகள், எழுத்துக்கள் இல்லை: எனவே ஒரு மொழிக்கு ஒலிகள் மிகவும் தேவை.

### மூன்று பெரும்பிரிவுகள்

ஒரு மொழிக்குப் பெருமையும் சிறப்பும் தருவது அதன் இலக்கண வளமும், இலக்கியப் படைப்புக்களுமே ஆகும். தமிழ் மொழிக்கு முதன் முதலாக இலக்கணம வகுத்தவர் தொல்காப்பியராவார். தொல்காப்பியம் இன்றைக்கு மிகவும் உயர்ந்த நிலையில் வைத்து, பல நாட்டு மொழி அறிஞர்கள் பலராலும் மிகவும் பாராட்டப்பட்டு வருவதைக்காண முடிகிறது. இலக்கணச் செல்வமே (Grammatical treasure) அந்நூலில் அடங்கியுள்ளதாகச் சொல்லிப் போற்றப்பட்டு வருவதையும் நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

ஒரு மொழியின் இலக்கணத்தை மூன்று பெரும பிரிவுகளாகப் பிரித்து அன்று இலக்கண ஆசிரியர்கள் ஆராய்ந்தார்கள். அவையாவன: 1. எழுத்து, 2. சொல், 3. பொருள் என்பனவாகும். இவற்றையே இன்றைய மொழியியல் வல்லுநர்கள் முறையே 1. ஒலி இயல் (Phonetics), 2 ஒலியின் இயல் (Phonemics), 3. சொல்லியல் (Morphemics), 4 சொற்றொடர் இயல் (Syntax), 5. பொருளியல் (Semontics) என்ற ஐந்து பெரும் பிரிவுகளில் ஆராய்கிறார்கள். இலக்கணமே ஒரு மொழியைக் கற்றுத் தருவதற்குச் சிறந்த கருவியாகப் பயன்படுகிறது எனலாம்.

ஒரு மொழியை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. எழுத்து அல்லது இலக்கிய மொழி (Literary or Written Language) 2 பேச்சு மொழி (Spok n Languages) என்பனவாகும். நான் மேற்கொண்ட ஆய்வில் பேச்சு மொழியே (கொல்லிமலைத் தமிழ்) இடம் பெற்றதால், நான இங்கு பேச்சு மொழி பற்றி சில கருத்துக்களையும் விளக்கங்களையும் சொல்ல விருபுகிறேன். எடுத்துக் காட்டாகபபேச்சுத் தமிழை எடுத்துக்கொண்டால் நாம் அதில் காணப்படும் பேச்சு வேற்றுமைகளை அறிந்து கொள்ளுகிறோம். பேச்சு மொழியை ஆங்கிலத்தில் 'Dialect' என்று மொழியியலார் சொல்வார்கள்; பேச்சு வேற்றுமைகளை 'Dialect Variations' என்று சொல்வார்கள். பேச்சு மொழியின் இப்பேச்சு வேற்றுமைகளுக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

### பேச்சு வேற்றுமை

'தேசம் தோறும் பாஷை வேறு' என்ற பழமொழியை நாம் எல்லோரும் அறிவோம். அதன்படியே இன்றும் ஒரு மாவட்டக்காரர் மற்றொரு மாவட்டக்காரருடன் பேசும்போது பேச்சு வேற்றுமைகளைக் காண முடிகிறது ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் (Caste) மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவரிடம் பேசும் போதும் பேச்சு வேற்றுமைகளைக் காண முடிகிறது. படிக்காதவர்களிடம் பேசும் போதும் அவர்களிடையே பேச்சு வேற்றுமைகள் நிறைந்து இருப்பதை நாம் உணர முடிகிறது. மேலும் நகரத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டுப் புறத்தைச் சேர்ந்தவர்களிடம் பேசும் போதும் அவர்களுக்கிடையே பேச்சு வேற்றுமைகள் ஏற்படுவதைக் காணமுடிகிறது.

ஆகவே பேச்சு மொழியில் பேச்சு வேற்றுமைகள் பல நிலைகளில், பல இடங்களில் நிறைந்து ஏற்படுகின்றன: ஏற்பட்டும் வருகின்றன என்பதை நாம்மறுக்க முடியாது — மறைக்கவும் முடியாது. இப்பேச்சு வேற்றுமைகள் உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் காணப்படுகின்றன.

இந்தப் பேச்சு வேற்றுமைகள் வேற்றுமை மட்டும் தருவதோடு நில்லாமல் மக்களிடையே உயர்வு தாழ்வையும் ஏற்படுத்தி விடுகின்றன. மேலும் இந்த வகையான பேச்சு மொழியே உயர்ந்தது என்று எண்ணிப் பெரும்பாலோர் அந்த வகையான பேச்சு மொழி வழக்கையே பின்பற்றுமாறு செய்துவிடுகிறது.

எடுத்துக்காட்டாக கல்கத்தாவிலே பேசப்படுகின்ற வங்காள மொழி மதிப்பு வாய்ந்ததாக அங்குக்கருதப் படுவதால் இலக்கியங்களிலும் சமூக அந்தஸ்து பெற்றவர்களிடமும் அந்த வகையான வங்காள மொழி மிகவும் செல்வாக்குப் பெற்று வருகிறது. அங்குப் பேச்சு மொழியே இலக்கிய உலகில் பெரும்பாலும் கையாளப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். அந்த நிலை இன்னும் நம் தமிழ் மொழியில் அதிக அளவில் வரவில்லை.

பேச்சிலே காணப்படும் மொழி — வேறுபாடுகளை இன்று பல்வேறு மொழியியல் வல்லுநர்கள் மிகவும் உற்சாகமாக ஆராய்ந்து வருகிறார்கள். ஏன் என்றால் இந்தவகையான பேச்சு வேற்றுமைகள் மனிதனின் உள்ளக்கிடக்கை, சமூகத்தில் அவனது இருப்பிடம், அவனது ஆசைகள், செயல்கள், எண்ணங்கள் மற்றும் சிந்தனைகள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுவதுடன் அவன் சேர்ந்திருக்கும் சமுதாயம், குழு, அவற்றின் நிலைகள் போன்றவைகளையும் தெளிவாக விளக்கிக் கூறுகின்றன; அவ்வாறு கூறுவதற்கு ஏதுவாக அமைகின்றன என்று நாம் அறுதியிட்டு கூறமுடியும்;

நமது தமிழ்மொழி தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் ஈழத்திலும ஆப்பிரிக்க நாடுகளிலும், கிழத்திசை நாடுகளிலும் பேசப்பட்டு வருகிறது தமிழ் மக்கள் எல்லாவித பிரிவுகளுக்கும் உள்ளடக்கி வருகிறார்கள் அவர்களுடைய தனிததனிப் பேச்சுமொழிகளை, அவற்றிற்கிடையே காணப்படும் பேச்சு வேறறுமைகளை நாம் அறிந்து கொண்டால், தமிழ் மொழியின் நெடுங்கால வளர்ச்சியையும் நம்மால் எளிதில் நன்கு அறிந்துகொள்ள முடியும்.

தமிழ் மொழியில் பேச்சு வேற்றுமைகள் இடத்திற்கு இடம (from region to region) சமூகத்திற்கு சமூகம் (from caste to caste) நிறைந்து காணப்படுவதற்கு மிக முக்கியமான இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவையாவன: 1 தமிழ் மொழி மிகவும் தொன்மையான மொழி ஆகும்.

2. தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய மரபுகள் மிகவும் செல்வாக்குப் பெற்றவையாகும். அதாவது தமிழ் மிகவும் செல்வாக்கு நிறைந்த மொழி (Tamil is a rich Language) ஆகும்.

ஒரு மொழி தொன்று தொட்டுப் பேசப்பட்டு வருவதாலும், நாளுக்கு நாள் உண்டாகும் மாற்றங்கள், புதிய கண்டு பிடிப்புக்கள், படைப்புக்கள், விஞ்ஞான உலகில் அதிசயங்கள்—சாதனைகள் போன்ற பலவகையான சூழ்நிலைகளாலும் அம்மொழியில் பேச்சு வேற்றுமைகள் ஏற்படுவது இயற்கையே. ஆனால் இவ்வாறு காலப்போக்கில் தமிழில் பேச்சு வேற்றுமைகள் நிறைந்து காணப்படினும் முன் சொன்ன இரண்டு காரணங்களினால் தமிழ்மொழி தனித்தன்மையும் செம்மையும் பெற்று மிகுந்தவலிவோடும் செல்வாக்கு நிறைந்த ஒரு தனிமொழியாக நின்று நிலவி வருகிறது.

—நன்றி,
'ஞானசம்பந்தம்'

---

## பொங்கல்

— ந. சிவநாதன்

மங்கிய இருளில் மயங்கிய கதிரவன்
எங்கும் ஒளிதர எம் முன் வருவான
எங்கள் தமிழினம் ஏற்றம் பெற்றிடப்
பொங்கல் பொங்கி மகிழ்ந்திடும் அன்றே
முடிக்கிடந்த பேரிருள் போகும்
மூடத் தனங்கள் தொலைவினில் ஓடும்
பாடிக் களித்தே பாவலர் வாழ்வார்
பாடுங் குயில்கள் சுதந்திர கீதம்
பேடித் தனங்கள் பீடைகள் எல்லாம்
பெருந் தீயிட்டுக் கொளுத்தி யதன்மேல்
தேடித் தியாக நெஞ்சங்க ளென்னும்
தங்கப் பானைக் கலயம் வைத்தே
தமிழன் மானம் உரிமைகள் என்னும்
முத்துச் சம்பா அரிசியை இட்டு
கமழும் நறுநெய் ஏலம் என்னும்
கடமை, கண்ணியம், கட்டுப் பாடும்
அமுதக் கலைகள் பாலாய்ச் சேர்த்தே
அருமைத் தமிழ்ப்பெண் இயற்றும் பொங்கல்
தமிழின் மேன்மை காத்திடும பொங்கல்
தணியா மோகம் தந்திடும் பொங்கல்
கிழக்கும் வடக்கும் குறியாய்க்கொண்டு
எழுவான் ஈழத்தமிழகச் செல்வன்
முழக்கும் ஒலிகள் சுதந்திர நாதம்
குயிலுங் கிளியும் பறவைகள் எல்லாம்
களிர்க்கும் வீரம் தமிழன் தீரம்
தடங்கல் இன்றித் தமிழ் மணம் ஓங்கும்!
கொழிக்கும் இன்பம், அன்பும், பண்பும்
இமயம் வெல்லும் எங்கள் வாழ்வு
'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்'
என்றே பாடி எம்மவர் வாழ்வார்!
சங்கம் தோன்றும்—கலையின் கோவில்
எங்கும் தோன்றி எங்கலை வாழும்!
பொங்கல் அன்றே! எம் தமிழ் மண்ணில்
அந்நாள் பூக்க வெறுநாள் இல்லை!
அந்நாள் காணும் அறிகுறி தோன்ற
இந்நாள் பொங்கற் திருநாள் தன்னிற்
கன்னற் பொங்கல் பொங்கிடு வோமே!
கூந்தல் முடித்துக் கொத்தாய் மலர்கள்
சேர்ந்தே மணக்கக் கோலம் இட்டுப்
பொங்கல் பொங்கிக் கணவன் முன்பு
அன்பும் பொங்கப் படைக்கும் போது
கண்கள் பேசக் காந்தள் விரல்கள்
பின்னிப் பிடித்தே பிறை நுதற்திலகம்
கன்னஞ் சேரக் காலை யணைக்க
தன்னை மறந்[illegible]
பண்ணும் இசை[illegible]
பாட்டுப் பொங்கல் படைத்தேன் நானும்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

---

## நாவலர் இன்றிருந்தால்...!

நாவலர் பெருமானது 150வது பிறந்த நாள் விழாவையொட்டி நாவலர் சபையினர் ஒரு மலர் வெளியிட்டுள்ளனர். இந்த மலருக்குள் நுழைந்து, கொம்யூனிஸ்ட் முற்போக்கு குஞ்சுகள் குளறுபடிகள் பல செய்து வைத்திருந்தாலும், அவர்களையும் மீறி தமிழினத்தின் உணர்ச்சியை பிரதிபலிக்கும் கட்டுரையொன்று மலரில் இறுதிக்கட்டுரையாக அமைந்துளது. அதனை எழுதியவர் புலவர் பாண்டியனார்! அக் கட்டுரையின் முடிவில் 95வது பக்கத்தில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது:-

நாவலர் இன்றிருந்தால், பௌத்தத்தினின்று சைவத்தையும், சிங்களத்தினின்று தமிழையும் மீட்டுப்பாதுகாத்தற்குப் பொங்கியெழாது வாளாவிருப்பாரோ? என்ன செய்வார்?"

# சின்னஞ் சிறு நாடுகள்! தன்னந் தனி அரசுகள்!

அன்பு நண்பா,

எங்கெங்கு நோக்கிடினும் மகிழ்ச்சி வெள்ளம்; இதயமெல்லாம் அலைபுரளும் இன்ப வெள்ளம்; சங்கங்கள்தோறும் சந்தனத் தமிழ் முழக்கம்; சங்குக் கழுத்தினர், சந்தனப் பாவையர் எழுப்பிடும் சங்கீதவொலி! நீண்ட நெடு வீதியெங்கும் மானினேர் விழி மாதர்கள் தீட்டியுள்ள எழிற் கோலம்! ஆண்ட தமிழ் மன்னர்களின் பெருமைகளை எடுத்தோதும் இளைஞர் கூட்டம்!

சூழ்ந்திருந்த இருளகற்றி, பனிபோக்கி சுதந்தர சூரியன் தோன்றினன்—நாம் வீழ்ந்திருந்த அடிமை வலை அறுத்தெறியப்பட்டாயிற்று; விடுதலை பெற்ற மக்கள் ஆனோம் நாம்; நமக்கென்றோர் நாட்டை—நாம் இழந்திருந்த திருநாட்டை மீட்டுவிட்டோம்; இனி நமக்கு வாழ்வில் ஒளிதான் உண்டு; இன்பத் தமிழின் கை விலங்கு ஒடிந்தது—என்று குதூகலிக்கின்றனர் தமிழரெல்லாம்!

செங்குருதி சிந்தினேம் இது நாள் வரை செந்தமிழர் நாட்டை மீட்டிட; இனி நம் சிரிளமை காதலியரின் கன்னங்களை செங்குருதி போல் சிவக்கவைப்போம் எனும் நினைவால்—உள்ளம் கள்வெறிகொள்ள களிப்புடன் காணப்படும் காளையர் கூட்டத்தினர்! காட்டுங்கள் அத்தான், விடுதலைப் போரில் நீங்கள் பெற்ற தியாகத் தழும்பினை; அப்போது தான் முத்தம் தருவேன் உமக்கு என்று ஊடிச் சிணுங்கிடும் அன்ன நடையினர்!

எங்கள் தமிழ் வென்றது; எதிர்த்த மொழி அழிந்தது என்ற எக்காள ஒலியுடன் தமிழ் முழக்கம் எழுப்பியபடியே மணி மாடங்கள் மனைகள் கூடங்கள் அனைத்திலும் தமிழ்க் கொடியை பறக்கவிடும் மாணவர் கூட்டம்!

முத்தமிழுக்கே வெற்றியென்று முரசு முழங்குது ஒருபால்; தத்தத்ததிகிடதோமென சுழன்றுடும் மகளிரின் சுந்தர நடனம் ஒருபால்; குழலொலியும் யாழ் ஒலியும் கேட்காத இடமேயில்லை; இசை நிகழ்ச்சிகள் ஒருபால்! சந்தனச் சேற்றை வாரியிறைத்து வாலிபரும் வனிதையரும் கொண்டாடும் வெற்றிக் கூத்து ஒருபால்!

உழவர் உள்ளங்களிலோ துள்ளுகிறது உவகை! தொழிலாளர்கள் குதூகலத்தில் மிதக்கின்றனர்! எல்லோரும் எல்லாம் பெரும் செல்வமும் எய்தி, இல்லாருமில்லை; உடையாருமில்லையென்ற சமதர்ம சமுதாயமாக தமிழர் சமுதாயம் உயர்ந்தது என்கின்ற மகிழ்ச்சிநிலை!

இஞ்சியும், மஞ்சளும் இனிமைதரு கனிகளும் கரும்பும், கற்கண்டும், பாலும் பருப்பும் கலந்து பொங்கல் பொங்கிடும் மங்கையர் கூட்டத்தின் வளையொலியும்; பொங்கலோ பொங்கல்— இன்பப் பொங்கலோ பொங்கல் என்று எழுச்சியுடன் குரலெழுப்பி மகிழும் காளையர் கூட்டத்தின் குரலொலியும்; புத்தாடை சரசரக்க புத்தம் புது அருவிகளென கலகலவென சிரித்து விளையாடும் சின்னஞ் சிறு சிட்டுகளின் மழலையொலியும் சேர்ந்து சிந்தையை நிரப்பிடும் இரம்மியமான காட்சி!

இப்படி நண்பா, ஆடலும்பாடலும், கூத்தும் கும்மாளமும், எழுச்சியும் மகிழ்ச்சியும், பண்ணும் பரதமும், நிறைந்து ஈழத்தமிழ் நாடெங்கும் பொங்கல் விழா — தமிழ்த்திருவிழா நடைபெறுமானால்...... என்றுஎண்ணிடும் போதே எத்துணை மகிழ்ச்சி நம் இதயங்களை நனைக்கிறது!

ஈழத்தில் வேற்றினத்தார் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னரேயே — நமக்கென ஒரு அரசு கண்டு—அரசு முறை கண்டு—வாழ்ந்து வந்த மரபினர் நாம்! பிறர் தமக்கென ஒரு மொழியை உருவாக்குவதற்கு முன்னரே — நமக்கென ஓர் மொழிகண்டு—அதற்கென ஓர் இலக்கணம் வகுத்து — இலக்கியம் படைத்தவர்கள் நாம்! ஆடுகள் மாடுகள் போல் அயலினத்தார் வாழ்ந்திட்ட காலை — தழைகளையும் மரப்பட்டைகளையும் கொண்டு அவர்கள் தம் மானத்தை மறைத்திட்டபோது—பட்டிலாடையும் பருத்தியாடையும் நெய்து நனிமிகு நாகரீகத்தை உலகிலேயே முதன் முதலில் உருவாக்கிக்காட்டி—இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்துச் சென்றவர்கள் நம் முன்னோர்!

கத்தும் கடலடக்கி, கலமோட்டிச்சென்று—முத்தும் பவளமும் விற்று வந்தார் நம்முன்னோர்! மாதோட்டத்திலும், திருகோணமலையிலும் காவலூர்த் துறைமுகத்திலும் காங்கேசன்துறையிலும் அயல்நாட்டு கலங்கள் பல வரிசையாய் நின்றதுண்டு அந்த நாளிலே! அயல்நாட்டு வணிகர் பலர் இங்குவந்து குவி[illegible]ண்டு நம் பொருளை வாங்க!

இப்படி, செல்வச் செழிப்பில் மூழ்கித் திளைத்ததுண்டு தமிழ் ஈழம் அற்றை நாளில்! வளமும் வனப்பும், சீரும் சிறப்பும் பொங்கித்ததும்ப மகிழ்ச்சியிலே திளைத்திருந்தார் நம்முன்னோர்! ஆனால் நாமோ இன்று, பஞ்சைகளாய், பராரிகளாய், அடிமைகளாய், மிடிமை மிகவுற்று வாழ்வதற்கே வகையின்றி, காலத்தை யோட்டுகிறோம்!

இந்த நிலை ஏன் வந்தது? அந்நாள் நம் முன்னோர் ஆற்றல் மறவராக வாழ்ந்திட்ட போது—இந்நாளில் நாமேன் இந்நிலைக்கு தள்ளப்பட்டு, துயர்மிக அடைகிறோம் என்று எண்ணிப்பார்த்திட வேண்டாமோ? ஏன் இந்த நிலை என்ற கேள்வியை ஒவ்வோர் தமிழனும் பொங்கல் திருநாளில் எழுப்பிப் பார்த்திடவேண்டாமோ?

அந்நாள் நம்முன்னோர் தமக்கென சொந்தத் தாயகத்தில் சுதந்திர மக்களாக சொந்த ஆட்சி நடத்தினர்; அதனால் தமிழ் மொழியும் சுடர்விட்டுப் பிரகாசித்தது—தமிழர் பொருள்வளமும், அருள்வளமும், ஆற்றல் வளமும் நிறைந்து விளங்கினர்! நம்முடைய கொடி நாடளாவப்பறந்தது!

இன்றோ நாம் நமது தாயகத்தை மாற்றானுக்கு பறிகொடுத்து — நம் ஆட்சியை இழந்து — கொடியை இழந்து — சுதந்திரத்தை இழந்து கைபிசைந்து நிற்கின்றோம்! இதுதான் நம் துன்பங்களுக்கு, துயரங்களுக்கு, வேதனைகளுக்கு எல்லாம் மூலாதாரமான அடிப்படைகாரணம்!

## அரசியல் மேடை

எனவே நாம் மீண்டும் நம் பழம் பெருமையை மீட்டிட வேண்டுமானால்—நம் மொழி மீண்டும் ஏற்றம் பெற்றிட வேண்டுமானால்—இழந்த நம் அரசுரிமையை மீண்டும் நாம் நிலை நாட்டியே ஆகவேண்டும்! தாயகத்தின்-தமிழ் ஈழத்தின்-விடுதலையைப் பெற்றேயாகவேண்டும்! இதைத்தவிர நம் இனமும் மொழியும் உய்வதற்கு வேறு மார்க்கமேயில்லை! நம் தமிழ் மண்ணின் பொருள் வளம் பூத்துக் குலுங்குவதற்கு—எழில் குலுங்கும் சோலையாக இன்பத்தமிழகம் மாறுவதற்கு—நம் நாட்டுக்கு நாமே எசமானர்களாக ஆவது தவிர வேறு வழியேயில்லை!

இல்லையே என்ற ஏக்கம் மாய்ந்திட-தொல்லை தரும் பசியும், பிணியும் வறுமையும் போக்கிட-வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கிட—எல்லோருக்கும் எல்லாம் என்ற இன்பநிலை எய்திட-தமிழ் ஈழம் சமதர்மப் பூக்காடாக மாறிட— நமக்கென்றோர் ஆட்சி வேண்டும்! அரசியல் அதிகாரம் நமது மக்களின் கைக்கு வந்தாகவேண்டும்!

இந்த இலட்சியத்துடன் இனத்தின் விடுதலையை நோக்கிப் பயணம் மேற்கொண்டிருக்கிறோம் நாம். ஆதிக்க வெறியர்கள் தரும் கொடுமைகளையும், தொல்லைகளையும், சிறைத் துன்பங்களையும் சித்திரவதைகளையும், நம் இயக்கத் தொண்டர்கள் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு வருகிறார்கள்!

விடுதலை இலட்சியத்தை நோக்கிப் பயணம் மேற்கொண்டிருக்கும் நம் இயக்கத்தினரைப் பார்த்துத்தான் எட்ட நின்று கேலி பேசிடும் சிலர் இப்போது ஒரு கேள்வி கேட்க தொடங்கியிருக்கிறார்கள் -- பிரிந்தால் தமிழினத்தால் தனித்து வாழமுடியுமா? தமிழ் ஈழம் தனி ஈழமாக இயங்குமா? என்று கேட்கிறார்கள்!

தமிழ் ஈழம் தனியரசாகத்தான் இயங்கி வந்திருக்கிறது — அந்நியனுடன் போரிட்டு சூழ்ச்சியால் வீழும் வரையில்! அப்படித் தனியரசாக இயங்கிய காலத்தில் தமிழ் ஈழத்து மக்கள் பசியாலும் பட்டினியாலும் செத்து மடிந்துவிடவில்லை, அல்லது சிங்கள நாட்டுக்கு மடிப்பிச்சை ஏந்திவந்திடவுமில்லை. செல்வச் செழிப்புடன் வாழ்ந்ததுமட்டுமன்றி தமிழ் நாட்டுக்கே கூட தமிழ் ஈழத்திலிருந்து அரிசியும் மற்றும் பொருட்களும் ஏற்றுமதி செய்ததாக இலக்கிய வரலாறுண்டு!

தமிழ் ஈழத்தில் மூலப்பொருள்வளம், முத்துவளம், கனிவளம், கடல்வளம், நீர்வளம், [illegible] அனைத்[illegible]றை அபிவிருத்தி செய்ய - பயன்படுத்திட அரசியல் அதிகாரம் தான் தமிழ் மக்களிடம் இன்றில்லை!

நம்முடைய தமிழ் ஈழம்—ஏறத்தாழ ஏழாயிரம் சதுர மைல் விஸ்திரணமும் 35 இலட்சம் மக்களையும் கொண்ட தாயகம்! இத்தகைய தாயகம், தனித்து இயங்கும் ஆற்றலற்றது — காரணம் மக்கள் தொகை போதியதாக இல்லை — தனித்து இயங்கிட நிலப்பரப்பும் போதாது என்றோர் வாதம் எதிரிகளால் எழுப்பப்படுகிறது!

நண்பா, இதோ—பட்டியலை தருகிறேன். நம் ஈழத் தமிழினத்தைவிட எண்ணிக்கையில் குறைந்த மக்கள் தொகையினர் — தமிழ் ஈழத்தைவிட குறைந்த அளவு நிலப்பரப்புடைய சின்னஞ்சிறு நாடுகளில்—சுதந்திரமாக வாழுவதை சுட்டிக்காட்டுகிறேன். இத்தனை சின்னஞ்சிறு நாடுகள் உலகில் சுதந்திர நாடுகளாக தனித்து வாழ்கின்றன என்பதை அறியும்போது — உன் உள்ளத்தில் எத்தகைய உணர்வு தோன்றும் என்பதையும் நான் அறிவேன்!

அன்டிகுவா (Antigua) —171 சதுர மைல் விஸ்திரணம் — மக்கள் தொகை 61,387— பேசும்மொழி ஆங்கிலம்.

பஹாமாஸ் (Bahamas) — விஸ்திரணம் 4,404 சதுரமைல்—மக்கள் தொகை 138,500 —மொழி ஆங்கிலம்.

பார்படோஸ் (Barbados) — விஸ்திரணம் 166 சதுர மைல் — மக்கள் தொகை 240,341 —மொழி ஆங்கிலம்.

பெர்முடா (Bermuda) — விஸ்திரணம் 21 சதுர மைல் — மக்கள்தொகை 48,000— மொழி ஆங்கிலம்.

பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகள் (British virgin islands) — விஸ்திரணம் 59 சதுரமைல்—மக்கள் தொகை 8619.

புருனை (Brunei) — விஸ்திரணம் 2226 சதுரமைல் — மக்கள்தொகை 100,000 — மொழிகள், மலாய், சீனம், ஆங்கிலம், இபன்'

கேமன் தீவுகள் (Cayman islands) — விஸ்திரணம் 100 சதுரமைல் — மக்கள் தொகை 8853—மொழி ஆங்கிலம்.

டொமினிக்கா (Dominica) — விஸ்திரணம் 290 சதுரமைல் — மக்கள்தொகை 64387— மொழி ஆங்கிலம், பிரெஞ்சு.

போக்லாண்ட் தீவுகள் (Falk land isles) —விஸ்திரணம் 4700 சதுரமைல் — மக்கள் தொகை 2079 — மொழி ஆங்கிலம்!

பிஜி (Fiji) — விஸ்திரணம் 7,055 சதுர மைல்—மக்கள் தொகை 4,69,934—

ஜிபிரால்டர் (Gibralter) — விஸ்திரணம் 2¼ சதுர மைல்—மக்கள் தொகை 24,485

கிறெனடா (Grenada)—விஸ்திரணம் 133 சதுரமைல்—மக்கள்தொகை 93,000

ஹொங்கொங் (Hong Kong)—விஸ்திரணம் 398 சதுரமைல்—மக்கள்தொகை 37,39000

மொறிஷியஸ் (Mauri Tious)—விஸ்திரணம் 720 சதுரமைல் — மக்கள் தொகை 741,000

மொன்டசேரட் (Montserrat) — விஸ்திரணம் 38 சதுரமைல்—மக்கள்தொகை 13,500

பிட்கெயர் (Pitcairn) — விஸ்திரணம் 2சதுரமைல்—மக்கள்தொகை 86.

அங்குயில்லா (Anguilla) — விஸ்திரணம் 138 சதுரமைல்—மக்கள்தொகை 59,000.

செனட். ஹெலினா (St. Helena) — விஸ்திரணம் 47 சதுரமைல் — மக்கள்தொகை 4676.

செனட் லூசியா (St. lucia)—விஸ்திரணம் 238 சதுரமைல்—மக்கள்தொகை 94,000.

டொங்கா (Tonga) — விஸ்திரணம் 270 சதுர மைல்—மக்கள் தொகை 71,000.

இப்படி நண்பா, உலகில் சுதந்திரமாக தனித்து வாழும் சின்னஞ்சிறு நாடுகளின் பெயர்களைக் கூறிக்கொண்டே போனால் எண்ணிலடங்காது! இவை அத்தனையும் நாம் கோரும் தமிழ் ஈழத்தைவிட அளவிலும், மக்கள் தொகையிலும் சிறியவை!

எனவே நம்முடைய கோரிக்கை—எடுத்தெறிந்துவிடக்கூடிய கோரிக்கையல்ல—நம்முடைய விடுதலை இலட்சியம் நிறைவேற முடியாததோ, நியாயவரம்புக்கு அப்பாற்பட்டதோ அல்ல—இலட்சியத்தை நோக்கி எவ்வளவுக்கெவ்வளவு வைரநெஞ்சுடன் தியாகப் பாதையில் செல்ல நாம் நம்மைத் தயாராக்கிக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது இன விடுதலையும் விரைவில் கிட்டுவது நிச்சயம்!

அந்த இலட்சிய உறுதியுடன் தமிழர் திருநாளாம் பொங்கலை மகிழ்ந்து கொண்டாடுவோம்! சிறையிருக்கும் கவிஞரையும் உள்ளத்தில் வைத்திடுவோம்! விடுதலைபெற்ற தமிழகத்தில் தமிழர் திருநாளைக்கொண்டாடும் நிலைகாண அயராதுழைத்திடவும் இற்றை நாளில் உறுதியெடுத்திடுவோம்!

'பொங்கலோ பொங்கல்! இன்பப் பொங்கலோ பொங்கல்!'

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## ஒற்றுமைப் பொங்கல்!

இல்லை... இல்லை... இல்லை...!

இந்தக் குரலே இன்று ஈழம் முழுவதும் கேட்கிறது!

பசித்தழும் குழந்தைக்கு பாலில்லை— பருப்பில்லை—பயறில்லை—சர்க்கரையில்லை, மிளகாயில்லை... இப்படி எங்கு நோக்கினும் எதை நோக்கினும் இல்லையென்ற கீதம்...!

நோய்வாய்ப்பட்டு வைத்திய மனையை நாடிச் சென்ருல் அங்கு மருந்துகூட இல்லை!

அப்படித்தான் எங்கேயாவது பொருட்கள் கிடைத்தாலும், அவை ஆனைவிலை, குதிரைவிலை விற்கிறது!

வாழ்க்கைச் செலவும், விலைவாசியும் நிமிடத்துக்கு நிமிடம் ஏறிக்கொண்டுவருகின்றன!

ஒவ்வொரு நாளும் காலையில் தினசரிகளைப் பிரிக்கும்போது, இன்று என்ன பொருளுக்கு 'கெசட்' மூலம் விலையேற்றப்பட்டிருக்கிறதோ என்று ஏக்கத்துடன் பார்க்கிருன் ஏழை மகன்!

ஆம், வாழ்க்கைச் செலவைக் குறைப்போம்—வாழ்க்கைத் தரத்தையுயர்த்துவோம்— விலைவாசியை கட்டுப்படுத்துவோம்—என்று வாக்களித்து, வாக்குப் பெற்று ஆட்சிபீடமேறியவர்கள். இன்று அதிகாரத்திலிருந்து கொண்டு மக்களை வாட்டிப் பிழிகிருர்கள்!

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இரவோடிரவாக வர்த்தமானி மூலம் விலைகளை உயர்த்துகிருர்கள்!

விலைவாசியைக் கூட்டுவதற்கு அமைச்சர்களுக்கு தேவையானது ஒரு கையெழுத்து — ஆனுல் அதனுல் பாதிக்கப்படுவதோ ஏழை நடுத்தர மக்களின் தலையெழுத்து!

ஆட்சியாளர்களோ 'சோசலிசம்' பேசிக்கொண்டு சுந்தரவாழ்வு வாழுகிருர்கள்—பளபளக்கும் கார்களில் பவனி வருகிருர்கள். நோய்நொடிவந்தால் ரஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் மருந்து தேடிப் போகிருர்கள். இவர்களது 'சோசலிசம்' என்ற வார்த்தையில் சொக்கி — ஆட்சிபீடத்தில் இவர்களை அமர்த்திய ஏழை, எளிய, நடுத்தர மக்களோ அன்ருட வாழ்வுக்கே இன்று திண்டாடுகிருர்கள்!

சந்தனத்தில் குளிக்கிருர்கள் அதிகாரபீடத்தினர்—சாக்கடையில் புரள்கிருர்கள் சாமான்ய மக்கள்!

நாட்டின் பொதுவான நிலை இதுவென்ருல் தமிழ் மக்களின் நிலையோ கேவலமாக்கப்பட்டிருக்கிறது!

இந்நாடு முழுவதையும் பௌத்த சிங்கள ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர முழுமுயற்சிகள் நடக்கின்றன.

புதிய அரசியல் சட்டம், தமிழ் மொழியின் உரிமைகளை முற்ருக நிராகரித்து, தனிச் சிங்களத்துக்கும் பௌத்த மதத்துக்குமே முடி சூடியுள்ளது. ஏனைய சைவ, இஸ்லாமிய, கிறித்தவ மதத்தவரின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி, ஏனைய மதத்தவர் கொடுக்கும் வரியைக் கொண்டு பௌத்த மதத்தை அரசு பேணி வளர்த்தும், பாதுகாத்தும் வருகிறது!

தமிழ் மொழியை இந்நாட்டில் நாதியற்ற மொழியாக்கி, தமிழ் இனத்தை அடிமையாக்கி, அழித்தொழிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன!

தமிழ் மக்களின் சொந்தத் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பி தமிழ மக்களின தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்கும் வேலையும்—பௌத்த சிங்கள பாடசாலைகளை நிறுவி, தமிழ் மககளை பௌத்தத்துக்கு மதமாற்றம் செய்யும் முயற்சியும்—தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் பொங்கலை — தமிழர் புத்தாண்டாம் தை முதல் நாளை தமிழ் மக்கள்—ஏழைகளும் தொழிலாளாகளும், விவசாயிகளும், நடுத்தர மக்களும் மற்றையோரும் — எப்படி மகிழ்ச்சியுடன், மனநிறைவுடன் கொண்டாட முடியும்?

பொங்கல் புதுநாளில் தமிழினம் புதிய வேகம் பெற வேண்டும்—புத்துணர்ச்சிகொண்டெழ வேண்டும்! செய்வோம அல்லது செத்துமடிவோம் என்று உறுதியெடுக்க வேண்டும்!

ஏற்பட்டுள்ள தமிழ் தேசிய இன ஒற்றுமையை கட்டிக்காத்திட ஒவ்வொரு தமிழனும் உறுதியெடுத்திட வேண்டும்!

தமிழர் கூட்டணி—தமிழினத்தின் தார்மீக பலத்துக்கும் எழுச்சிக்கும் எடுத்துக்காட்டு. இதை உடைக்க முயல்பவன் எவனுயிருந்தாலும்-அவன் உள்ளேயிருந்தாலும் சரி வெளியே இருந்தாலும் சரி-தமிழினத்தின் முதலாவது எதிரி அவனே யென்று நாம் பிரகடனப்படுத்தவிரும்புகிறேம்!

தமிழினத்தின் எதிரிகள் — பகை ஏடுகள் — தமிழர் கூட்டணியை உடைக்க ஏற்கெனவே பல முறை முயன்று தோற்றுவிட்டன. இந்தத்தடவை மட்டுமல்ல—எந்தத் தடவையுமே—தமிழர் ஒற்றுமைக்கு குழிதோண்டுபவர்களின் வாலை தமிழ் மக்கள் ஒட்ட நறுக்கிவிடுவார்கள்!

ஆக தமிழினம்—பொங்கல் நாளில் எடுக்கவேண்டிய உறுதியிதுதான்—

**ஒற்றுமையைக் கட்டிக்காப்போம்!**
**உரிமைக்குப்போர் தொடுப்போம்!**

# இனவெறியர் என். கியூ. டயசின் திமிர் பிடித்த கூச்சல்!

## சிங்கள மக்களுக்கு நம்பிக்கையில்லை— எனில் சேர்ந்து வாழ்வது எங்ஙனம்?

திரு என். கியூ டயஸ் என்பவர் முன்னர் இலங்கையில் பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளராக இருந்தவர் பச்சை வகுப்புவாதி —தமிழர் விரோதி, பௌத்த சிங்கள ஆதிக்கவெறிபிடித்தவர் என்று பட்டம் பெற்றவர். இங்கு தமிழர்களுக்கு எதிராக துவேஷத்தை கொட்டி வந்தவர்.

இந்த இனவெறியர்தான் —பௌத்தசிங்கள ஆதிக்கத் திமிர் பிடித்தவர்தான் இப்போது இந்தியாவில் இலங்கையின் தூதுவராக இருந்து வருகிருர்.

இவர் அண்மையில் சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் இலங்கைத் தமிழர்களின் ஸ்தாபனமான தமிழரசுக்கட்சிக்கும் மலைநாடடுத்தமிழர்களுக்கும் எதிராக பல அவதூறுகளை கக்கியிருக்கிருர்.

இந்தியாவுக்கு விஜயம் செய்யும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கைகள குறித்து இலங்கைத் தூதரகத்தின் உளவுப்பிரிவு கண்காணித்து வருகின்றதென்ற உண்மையை அவர் ஒப்புக்கொண்டிருககிருர்.

நன்ருகக் கண்காணிக்கட்டும்— நமக்கு அதனுல் நட்டம் ஒன்றுமில்லை!

ஆனுல் இலங்கையில் வாழும் இரண்டாவது பெரிய இனமான தமிழினத்தின் தலைவர்களை—தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களுக்கும், தமக்கும் இரகசிய உறவுகளோ அரசியல் ரீதியான தொடர்புகளோ எதுவுமில்லையென்று தேசிய சேவையிலும் வெளியிலும், பல தடவைகளில் எந்த வித ஐயத்துக்கிடமின்றி தெரிவித்து விட்ட பின்னரும்—தமிழ் மக்கள் மீதும், அவர்களது தலைவர்கள் மீதும் அவநம்பிக்கை கொண்டு, உளவு பார்க்கிறது இலங்கை அரசு என்ருல்—இந்நாட்டில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நிரந்தரமாகப் பிரிந்து போவதற்கு அரசாங்கமே வழி வகுக்கிறது என்பதுதான் பொருள்.

அவ்வளவு தூரம் நம்பிக்கையற்றவர்களுடன் தமிழ் மக்கள் மேலும் எப்படி சேர்ந்து வாழமுடியும்? ஒன்றுபட்டு எப்படி அரசியல் நடத்த முடியும்?

அரசாங்கத்தின் நடவடிக்கைகளே, தமிழ் மக்களைப் பிரிவினைப்பாதைக்கு இட்டுச் செல்கின்றன; தனியாக பிரிந்து தனி நாடொன்றை நிறுவவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளிச்செல்கின்றன என்பதற்கு, தமிழர் தலைவர்கள் மீது — அதுவும் வெளிநாடொன்றில் வைத்து— கண்ணியமற்ற முறையில் ஒற்றுவேலையில் அரசு ஈடுபடுவதே போதுமான காரணமாக விளங்குகிறது.

அடுத்து, இந்நாட்டின் மண்ணுக்காக தலைமுறையாக உழைத்து வரும் மலைநாட்டுத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கிருர் என். கியூ. டயஸ்

இந்நாட்டுக்காக ஓடாக உழைத்து உருக்குலைந்து நிற்கும் இந்திய வம்சாவளியினரான மலை நாட்டுத் தமிழர்கள் — குடியுரிமை, வாக்குரிமை, கல்வியுரிமை, நிலம் பெற்று வாழும் [illegible] உரிமைகளும் மறுக்கப்பட்டு, பறிக்கப்பட்டு, நெருக்கப்பட்டுள்ளனர். தென்னுப்பிரிக்காவிலும், ரொடீசியாவிலும் நடத்தப்படும் கொடுமைக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல இது.

பொட்டுப்பூச்சிகளாக—புன்மைத்தேரைகளாக மலையகத்தமிழர்களை ஒதுக்கி, அவர்களை நாட்டை விட்டு விரட்டிடத்திட்டம் தீட்டி— நாட்டிலிருந்து விரட்டியடித்தும் வருகிருர்கள ஆட்சியினர். ஆனுல் சென்னையில் பேட்டியளித்த என். கியூ. டயசோ, தமது (சிங்கள) நாடு "இந்தியர்களை" தாராள மனப்பான்மையுடன் நடத்தி வருவதாக கதையளந்திருக்கிருர்!

பர்மாவைப்போலன்றி, இலங்கையிலிருந்து செல்லும் இந்தியர்கள் தமது சொத்துக்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டி

### எஸ். ஆர். எம்.

ருக்கிருர்கள் என்று கூறி தமது அரசின் பெருந்தன்மைக்குத்தாமே நற்சாட்சிப் பத்திரம் வழங்கியிருக்கிருர் என். கியூ. டயஸ்.

இது எப்படிப்பட்டது என்ருல்—அடுத்த வீட்டுக்காரன் ஒரு பெண்ணைக்கற்பழித்துவிட்டு, அவளை வெறுங்கையோடு அனுப்பினுன்; நானே வெறுங்கையோடு—அனுப்பவில்லை — கையில் பத்து ரூபா கொடுத்து அனுப்புகிறேன் — எனவே அவனை விட நான் உயர்ந்தவன் அல்லவா என்று கேட்பதுபோலவேயிருக்கிறது!

இந்நாட்டுக்காக உழைத்த தோட்டத்தமிழ் மக்களுக்கு இருந்த உரிமைகளையும் பிடுங்கிவிட்டு, 'பிச்சை' போட்டு அனுப்புவதா நன்றி காட்டுவதென்பது? இப்படியா பௌத்ததர்மம் போதிக்கிறது? தாராளம் காட்டுகிருர்களாம் தாராளம் சீ ... நன்றிகெட்டவர்கள்!

"இந்தியர்கள் 'தனி இனமாக' வாழுகிருர்கள்—அவர்கள் "உள்ளூர்" மக்களுடன் கலப்பது இல்லை — அவர்களது பழகக வழக்கங்கள் புறம்பானவை—அவர்களது அபிமானத்துக்குரிய வீரர்கள் யாவரும் இந்தியர்களே யாவர்" என்று குற்றப் பத்திரிகை படித்திருக்கிருர் என். கியூ. டயஸ்.

இந்திய வம்சா வழியினரான மலைநாட்டுத்தமிழர்கள் இலங்கையில் வாழுவதாக இருந்தால் சிங்கள இனத்தோடு சேர்ந்து இரண்டறக்கலந்து தங்கள் தனித்துவத்தை இழந்துவிட வேண்டும் என்பதுதான் பௌத்த சிங்கள வெறியர்களின் நோக்கமாகும். இதைத்தான் சொல்லிக் காட்டியிருக்கிருர் என். கியூ. டயஸ்.

இந்திய வம்சாவழியினர், தன்மானத் தமிழ் குலத்தினர்; பெருமைமிக்க தமிழ்மொழியையும், சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட தனியான பண்பாடு, பழக்கவழக்கங்களையும் கொண்டவர்கள் — அவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் இலங்கையின் பூர்விகத்தமிழர்களுடன் இணைவார்களே தவிர, மத, மொழி, கலாசாரத்திலுல் வேறுபட்ட சிங்கள மக்களுடன் [illegible] மாட்டார்கள் என்பதை சிங்கள பௌத்தர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தியாவுடன் இலங்கைத் தமிழர்களுக்கு மொழி, கலாசார இலக்கிய, மத ரீதியான பிணைப்பும் பாடும் உறவும் உண்டு: அந்த முறையில், மகாத்மா காந்தி, நேருஜி, ராஜாஜி பேரறிஞர் அண்ணு, சுப்பிரமணியபாரதி போன்ற தலைவர்கள் மீது தமிழர்கள் அபிமானம் வைப்பதில் என்ன தவறு உண்டு? என்ன பிழை உண்டு? இந்த உறவையும் பாசப்பிணைப்பையும் அறுத்தெறிய ஆயிரம் என். கியூ. டயசுகள் பிறந்துவந்தாலும் முடியவே முடியாதென்பதை மட்டும் கூறி வைக்க விரும்புகிறேம்.

## புத்தூரில் பெரியவருக்கு வரவேற்பு!

புத்தூர் கிராமசபையும் இருபத்தேழு சனசமூக நிலையங்களும் இணைந்து — ஈழத் தமிழக முதல்வர் பெரியவர் செல்வாவுக்கு புத்தூர் கிராமசபை வளவில் பிரமாண்டமான வரவேற்பொன்றை 13-1-73ல் அளிக்கின்றன.

திரு. மு. திருநாவுக்கரசு ஜே. பி. தலைமையில் நடைபெறும் இவ்வரவேற்பு விழாவில் தமிழர் கூட்டணித் தலைவர்களும் பிரமுகர்களும் உரையாற்றுகிருர்கள்.

## பொங்கல் விழா

தமிழ் கிறிஸ்தவ இளைஞர் கழகத்தின் சார்பில் இன்று (14.1.73) மாலை 6 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித ஆசியார் மண்டபத்தில் பொங்கல் விழா நடைபெறுகிறது.

## வடபகுதிக்குமேலும் சிங்கள ஆசிரியர்!

ஏற்கெனவே தமிழ்ப்பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள ஐந்து சிங்கள ஆசிரியர்களையும உடனடியாக வாபஸ் பெறும்படி தமிழர் கூட்டணி விடுத்த எச்சரிக்கைக்குப் பதிலாக-மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள எட்டுப் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்ப கல்வியமைச்சு ஏற்பாடு செய்துவருகிறதாம்.

பெற்ருேர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை என்ற போர்வையின்கீழ் இந்தச் சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படவிருக்கிருர்கள்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பதினெரு தமிழ் பாடசாலைகளுக்கும், மன்னர் மாவட்டத்திலுள்ள ஒன்பது தமிழ் பாடசாலைகளுக்கும் சிங்கள ஆசிரியர்களை அனுப்பவும் முயற்சி நடப்பதாக அறியப்படுகிறது.

இதுபற்றி 13. 1. 73ல் யாழ்ப்பாணத்தில் கூடும் தமிழர் கூட்டணி ஆராய்ந்து அடுத்த நடவடிக்கை பற்றி முடிவுசெய்யும் என்று தெரிகிறது.

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**226-வது நாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசூரியரின் சுய உருவம் அம்பலமானது!

## பண்டிதரின் இரு கடிதங்கள் பகிரங்கப்படுத்திய உண்மைகள்!

தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியரின் சுய ரூபத்தையும் அரசியற் சூதாட்டத்தையும் அம்பலப் படுத்தி அவரது முகமூடியைக் கிழித்தெறியும் இரு கடிதங்களை அண்மையில் தேசிய பேரவையில் காவலூர் பா. உ. பண்டிதர் க. பொ. இரத்தினம் சமர்ப்பித்திருந்தார். அந்தக் கடிதங்களை இங்கு சுதந்திரன் வாசகர்களுக்காக கீழே தருகிறோம்.

19-11-72 வேலணையிலிருந்து பண்டிதர் இரத்தினம் குமாரசூரியருக்கு எழுதிய கடைசிக்கடிதம் வருமாறு:-

எனது அவசர அவசிய கடிதங்களுக்கு நீங்கள் எவ்வித மறுமொழியும் அனுப்பவில்லை. எனது நினைவூட்டல்களும் பயனற்றுவிட்டன. மறுமொழி அனுப்புவதாக நேரிலும் தொலைபேசியிலும் கூறினீர்கள்; கூறியவாறு செய்யவில்லை.

நீங்கள் நியமனப் பா. உ. வாகப் பிரதிநிதிகள் சபைக்கு நியமிக்கப்பட்ட இரண்டொரு நாள்களுள் 'என்னுடைய கழுத்தை வெட்டுகிறீர்களே' என்று என்னை மன்னார் பா உ.வுக்கும் வேறோர் பா. உ.வுக்கும் முன்னிலையில் கேட்டீர்கள். ஏனைய அமைச்சர்கள் எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை மதிப்பதைப் போல அவர்கள் எங்கள் கடிதங்கள் முதலியவற்றுக்கு விரைவில் நடவடிக்கை எடுப்பது போல-நீங்களும் நடந்தால் நான் 'கழுத்தை வெட்டும்' நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையில்லை என்றேன்.

பிரதிநிதிகள் சபைக்கு வந்தபின் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை மதிக்கும் பண்பும் பழக்கமும் ஓங்குமென்று எண்ணினேன். தமிழ்மொழி உரிமை, எனது தொகுதித் தேவைகள் முதலியன குறித்து உங்களுக்கு எழுதினேன். ஐந்து நினைவூட்டல்கள் அனுப்பியும் நீங்கள் அசையவில்லை.

### ஏமாற்றியது போதும்

எனது உத்தியோகத் தொலைபேசியை ஊர்காவற்றுறைத் தன்னியக்கமாற்றியுடன் இணைப்பதற்கு ஓராண்டுகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது: இதுபற்றி உங்களுடன் நான் பேசிய பொழுது விரைவில் செய்யுமாறு உங்கள் 'அணுக்கச்' செயலாளர் திரு. டயகருணாரத்தினவைப் பணித்துள்ளதாகக் கூறினீர்கள். இணைப்பு வேலை வேண்டுமென்றே கடத்தப்பட்டதை உணர்ந்தமையால் நான் மீண்டும் உங்களுக்கு இவ்விடயத்தை நினைவூட்டினேன். ''கம்பிகள் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் எவ்வளவு விரைவில் செய்விக்கலாமோ அவ்வளவு விரைவில் செய்விக்கலாம்' என்று உறுதி கூறினீர்கள். இதை நீங்கள் எவ்வமயத்திலும் எவ்விடத்திலும் மறுக்கமாட்டீர்கள் என எண்ணுகிறேன்.

உங்கள் செயலாளர் புதிய காரணம் கற்பித்து ஏமாற்றுகிறார். என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உங்களுக்கு எழுதிய இரண்டு கடிதங்களுக்கும் நீங்கள் மறுமொழி அனுப்பவில்லை: உங்களின் இந்தப்போக்கு உங்கள் செயலாளர் உங்கள் எண்ணப்படியே என்னை ஏமாற்ற முயன்றார் என்பதை நிலைநாட்டுகின்றது:

'சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது' என்பார்கள், தமிழரசுக் கட்சியை அழித்து விடலாம் தமிழரசுப் பா. உக்களை அடக்கி ஒதுக்கி விடலாம் தமிழ்ப் பகுதிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கிளைகளை நிறுவி ஆட்சி நடத்திடலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டு, தமிழ் மக்களின் கோரிக்கைகளை புறக்கணித்துத் தமிழின் — தமிழ் மொழிக்கொலைகளில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத்தைப் பதவிக்காக ஆதரிக்கும் நீங்கள் எனது கோரிக்கைகளை மதித்து எனது தொகுதித்தேவைகளை இலகுவில் நிறைவேற்றுவீர்கள் என்று எண்ணுவது மடமையிலும் மடமை.

இச்சூழ்நிலையில் உங்களிடம் நீதியையோ நியாயத்தையோ மறுமொழியையோ எதிர்பார்த்து மேலும் நான் ஏமாற்றமடைய விரும்பவில்லை. எனவே எனது பிரச்சினைகளை எல்லாம் தேசிய அரசுப் பேரவைக்குகொண்டு செல்வதைத் தவிர வேறு வழியில்லை. உங்களுக்குக் கடிதங்கள் எழுதி காலத்தை வீணாக்கியமை குறித்துக்கவலைப் படுகிறேன். நன்றி.

'ஒட்டார் பின் ஒருவன் சென்று வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப் படுதல் நன்று'

### அரசியல் சூதாட்டம்

'அரசியல் சூதாட்டம்' எனும் தலைப்பில் 2-12-72ல் வேலணையிலிருந்து பண்டிதர் இரத்தினம் கல்வியமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:- இக்கடிதத்தின் பிரதியை பிரதம அமைச்சருக்கும் பண்டிதர் அனுப்பியுளார்.

''வேலணை கிழக்கு அரசினர் தமிழ்ப்பாடசாலை மகாவித்தியாலயமாக்கப்பட்டுள்ளதெனக்கூறி 1970ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது மக்களைச் சிலர் ஏமாற்றினர். முன்னைய அரசாங்க கல்வி அமைச்சரின் உதவியுடன் முன்னைய ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் தேர்தலில் வெற்றிபெறும் நோக்குடன் இத்திருவிளையாடலைச் செய்தார். தேர்தல் முடிந்தபின் இத் தமிழ்ப் பாடசாலை மகாவித்தியாலயமாக்கப்பட்டுள்ளதென நானும் எண்ணி இதற்கு ஒரு பட்டதாரியை அதிபராக நியமிக்குமாறு கேட்டேன். நியமனம் நடைபெற்றது. ஆனால் நியமிக்கப்பட்டவர் பொறுப்பேற்கு முன் இப்பாடசாலை மகாவித்தியாலயமாக்கப்படவில்லை. இதுவும் ஒரு தமிழ்ப்பாடசாலையே என்பது கல்விப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அந்நியமனம் நீக்கப்பட்டது.

இச்சூழ்நிலையில் இப்பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்துமாறு நான் வற்புறுத்தினேன். பாடசாலைகளைத் தரமுயர்த்துதல் பற்றிப் பொதுவாக ஆராய்வதாகவும் முடிவு செய்தபின் அறிவிப்பதாகவும் கூறப்பட்டது.

புதிய கல்விச் சீரமைப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்த பின் ஏனைய பாடசாலைகளிற் போல இப்பாடசாலைக்கும் ஒரு பட்டதாரி ஆசிரியரைப் பதில் அதிபராக நியமிக்கச் செய்தேன். இந்தப் பதில் அதிபரைத் திடீரென மாற்றியவுடன் வடமாநிலக் கல்விப் பணிப்பாளரை விசாரித்தேன். வடபகுதியில் பல பாடசாலைகளில் இவ்வாறு பதில் அதிபராயிருந்த பட்டதாரிகளைக் கல்வி அமைச்சின் கட்டளைப்படி மாற்றியுள்ளோம் என அவர் கூறினார். கல்வி அமைச்சிலுள்ள உத்தியோகத்தரும் இதனை எனக்கும் இப்பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளருக்கும் உறுதிப்படுத்தினர். இதனால் இப்பாடசாலையையும் இதனிலும் பெரிய பாடசாலைகளையும் உடனே மகாவித்தியாலயங்களாகத் தரமுயர்த்துமாறு நான் கேட்டேன்.

### வற்புறுத்தினேன்

இந்நிகழ்ச்சிகளின் பின் இப்பாடசாலையைச் சேர்ந்த சிலர் சிறீலங்கா சுதந்திரக்கட்சி புதிய அமைப்பாளர்களில் ஒருவரும், தேர்தலில் என்னால் தோற்கடிக்கப்பட்டவருமா திரு ப. கதிரவேலுவைப் பிடித்து அமைச்சர் செ. குமாரசூரியரின் உதவியுடன் உங்கள் கட்டளைப்படி கொள்கை அடிப்படையில் மாற்றப்பட்ட பதில் அதிபரை மீண்டும் நியமிக்கச் செய்திருக்கின்றனர். இவ்வாறு இந்தப் பாடசாலைக்கு மட்டுமே மீண்டும் நியமிக்கச் செய்திருக்கின்றனர். இவ்வாறு இந்தப் பாடசாலைக்கு மட்டுமே மீண்டும் நியமனம் செய்ததற்காக திரு. ப. கதிரவேலுவுக்கு இப்பாடசாலையில் ஒரு பகிரங்க வரவேற்பும் நடத்தியுளர். 25-11-72 திகதித் தினகரனில் இக்கூட்டச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியின் பின் உங்கள் அமைச்சு நீதியாக நேர்மையாகப் பணியாற்றுகின்றது. கட்சி அரசியல் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை என்று யாரேனும் சொல்வார்களா? இத்தகைய நிகழ்ச்சிகளினாலே உங்கள் அமைச்சில் நடப்பது போன்ற உழல்கள் — அநீதிகள் —அரசியல் சூதாட்டங்கள் வேறெந்த அமைச்சிலும் நடைபெறவில்லை என்று மக்கள் கருதுகின்றார்கள்.

இப்பாடசாலையை மட்டுமன்றி எனது 6-10-72ம் திகதிக் கடிதத்தில் குறிப்பிட்ட பாடசாலைகளையும் மகாவித்தியாலயங்களாகத் தரமுயர்த்த உடனே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விருபுகிறேன். பெரியபாடசாலைகளை ஒதுக்கி விட்டுச் சிறிய பாடசாலைகளை மகாவித்தியாலயமாக்கினால் 'நீதி செய்கிறோம்' என்று மக்களை ஏமாற்ற முடியாது.

எனவே வேலணை கிழக்கு அரசினர் த. பாடசாலையை மகா வித்தியாலயம் ஆக்குவதுடன் அதிலும் பெரிய பாடசாலைகளான (1) சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் (2) புங்குடுதீவு கணேச வித்தியாலயம் (3) நயினாதீவு கணேசவித்தியாலயம் (4) வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் என்பனவற்றையும் மகாவித்தியாலயங்களாக ஆக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## ஊருக்கு உபதேசம்....!

''அசோக சக்கரவர்த்தி, பிறமதத்தினரை மனம் நோகும்படி செய்யாதீர்கள்! அவர்களுக்கும் மதிப்பை அளியுங்கள்- அப்போதுதான் உங்கள் மதம் வளரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தத்துவத்தை நாம் உணரவேண்டும்''

— இவ்வாறு யாழ் நாகவிகாரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் நல்லூரில் நாவலர் கலாசார மண்டபத்துக்கு அத்திவாரமிடச் சென்றிருந்த கலாசார அமைச்சர் குலதிலக ஊருக்கு உபதேசம் பண்ணியிருக்கிறார்!

நாம் கலாசார அமைச்சரைக் கேட்கிறோம் —

இந்த உபதேசம் ஊருக்கு மட்டும்தானா? உங்களுக்கில்லையா!

உங்கள் அரசுதானே, புதிய அரசியல் சட்டத்தில் ஏனைய மதங்களுக்கு இல்லாத உரிமைகளையும் முதலிடத்தையும் பௌத்த மதத்துக்கு மட்டும் வழங்கி, ஏனைய மதத்தவர்களை மனம் நோகும்படி செய்கிறது!

ஏனைய மதங்கள்மீது — குறிப்பாக இந்துக்களில் ஓர் பகுதியினர் மீது — மறைமுகமாக பௌத்தத்தை திணித்து, சிங்கள மொழியையும் திணிக்க முயலுகிறீர்கள் — தமிழ்ப் பகுதியில் பௌத்த சிங்கள பாடசாலைகளை உருவாக்குகிறீர்கள்!

இஸ்லாமிய மக்கள் தாம் விரும்பியபடி புனித ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள முடியாமல் அவர்களது உரிமைகளைப் பறிக்கிறீர்கள்!

கதிர்காமத்தில் பரம்பரை பரம்பரையாக, காலம் காலமாக இருந்து வந்த இந்து மத மடங்களை இடித்துத் தள்ளி அதை பௌத்தர்களுடைய சொத்தாக்க முயற்சிக்கிறீர்கள்!

இப்படி பிறமதத்தவர்கள் மீது உங்கள் பௌத்த மதத்தையும் கலாசாரத்தையும் திணிக்க முயற்சித்து பிறமதத்தவர்களின் உள்ளங்களை நீங்கள்தானே புண்படுத்துகிறீர்கள்!

சைவர்களோ, சிறிஸ்தவர்களோ, இஸ்லாமியர்களோ பிறமதத்தவர்களின் மனங்களை — குறிப்பாக பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் எந்த செய்கைகளையும் செய்யவில்லையே!

பௌத்த மதத்துக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் அதே உரிமைகளை ஏனைய மதங்களுக்கும் வழங்கினால் மட்டுமே அசோக சக்கரவர்த்தியின் வார்த்தைக்கு நீங்கள் மதிப்பளித்தவர்கள் ஆவீர்கள்!

இதை விட்டு ஊருக்கு உபதேசம் செய்து மக்களை ஏமாற்ற முயல வேண்டாம்!

— எஸ். ஆர். எம்.

## டியநில்லை மண் சரிவு; கழகத்தின் இணையற்றசேவை!

மலையகத் தமிழ் மக்களுக்கு—குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பணியாற்றுவதற்கென்றே உருவானதுதான் இலங்கைத் தொழிலாளர் கழகம் -

கழக ஊழியர்களின் கண்ணியமிக்க — சுயநலக் கலப்பற்ற — சேவைகண்டு தோட்டத்தொழிலாளர்கள் பெருமிதமடைகிறார்கள் — பாராட்டுகிறார்கள்!

அண்மையில் டியநில்லைத் தோட்டத்தில் மண் சரிவு ஏற்பட்டு மக்கள் புதையுண்டபோது ... கண்ணீரும் கம்பலையுமாக அவர்களது குடும்பத்தினர் அழுது அரற்றி நின்றபோது...!

முதன் முதலாக ஓடோடி வந்து அந்த மக்களின் துன்பத்தை துடைத்தவர்கள் இ. தொ. கழகத்தினர்.

இ. தொ. கழகப் பொதுச் செயலாளர் மு. பரராசசிங்கம் மாவட்டப் பிரதிநிதி, வி. ஆறுமுகநாதன், கழக உபதலைவர் திரு. ந. அ. சின்னத்தம்பி ஆகியோரே மண்சரிவு செய்தி கேட்டதும் ஸ்தலத்துக்கு ஓடிவந்தோர்...!

இரவு பகலாக அந்த இடத்தில் நின்று கதறியழும் மக்களுக்கு ஆறுதல் சொல்லியும் புதையுண்ட சடலங்களை தோண்டியெடுத்தும் இவர்கள் செய்த உதவியை இன்றும் அப்பகுதி மக்கள் எண்ணி எண்ணிப் பாராட்டி மகிழுகிறார்கள்!

தன்னலங் கருதாது சேவையையே தனது ஒரே நோக்கமாகக் கொண்ட இ. தொ. கழக ஊழியர்களை இன்று மலையகம் முழுவதுமே பாராட்டுகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதர் ராஜாஜி

அவர்கள் சரித்திர நதியின் அணைக்கட்டுகள். அனுபவக் கல்லூரியின் பேராசிரியர்கள். அறிவெனும் நந்தா விளக்கின் ஜுவாலைகள்.

அவர்களது ஜனனம் ஒருபோதும் விசேஷமாகக் கருதப்பட்டதில்லை.

ஆனல் மரணமோ சரித்திரத்தின் மகத்தான மணிமண்டபமாகக் கருதப்படுகிறது.

உயர்ந்தோர்:
நல்லோர்.
பெரியோர்.
ஞானிகள்.

—இந்த வார்த்தைகளில் பாரதத்தின் முழு வரலாறுகளும் அடங்கிக் கிடக்கின்றன:

அந்த விளக்குகள் ஒளியைத் தந்தன; நாம் வாழ்க்கையைக் கண்டுகொண்டோம்.

அந்தக் கைகாட்டிகள் பாதையைக் காட்டின. நாம் போகவேண்டிய ஊருக்குப் போய்ச்சேர்ந்தோம்.

அந்த மேகங்கள் மழை பொழிந்தன. நாம் நமது நிலங்களைச் செழுமையாக்கிக்கொண்டோம்.

பிறக்கும்போது ஊமையாகவும், பருவ காலத்தில் குருடனுகவும், பற்றும் பாசமும் சூழ்ந்த பிறகு திருடனுகவும், முதுமைக் காலத்தில் பொறுமை இழந்தவனுகவும் வாழ்ந்து மடிகின்ற சாதாரண மனிதனுக்கு, அவர்கள்தான் செம்மையான, சுகமான வாழ்க்கை நிம்மதியைக் காட்டினர்.

அவன் கண்கள் காணத் தொடங்கும்போதே நல்லவற்றைக் காணும்படி அறிவுறுத்தினுர்கள்.

அவன் வாய் பேசத் தொடங்கும்போதே உண்மையைப்பேசும்படி வலியுறுத்தினுர்கள்.

காதலிக்கும்போது பெண்களுக்குப் பண்புள்ள இலக்கணம் சொன்னுர்கள்.

எப்படி வாழ்ந்தால் நிம்மதி என்பதற்கும் இலக்கணம் தந்தார்கள்.

நீதிக் கதைகளும், குட்டிக் கதைகளும் சொல்லி நீதியை மனதில் பதிய வைத்தார்கள்.

ராஜ தண்டனையை விடத் தெய்வ தண்டனை உறுதியானது என்பதை நம்பிக்கையோடு பதிய வைத்தார்கள்.

பிறரை ஏமாற்றுமல் வாணிபத்தில் லாபம் சம்பாதிக்க முடியும் என்பதையும், அடுத்தவன் சொத்தை அபகரிக்காமல் சுயமாகவே சம்பாதித்தே சேர்க்க முடியும் என்பதையும், நமக்குக் கிடைக்கின்ற எல்லைக்குள்ளேயே நமது மகிழ்ச்சியை அதிகப்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் அவர்கள் தான் விளக்கிச்சொன்னுர்கள்.

மரணத்தின் பின் சொர்க்கமோ நரகமோ கிட்டுவது, மரணத்துக்கு முன்னுல் நீ வாழ்ந்த வாழ்க்கையைப் பொறுத்தது என்பதை அவர்கள்தான் தெளிவுபடுத்தினுர்கள்.

'பேராசை பெரு நஷ்டம்' என்ருர்கள். விநாசகாலே விபரீத புத்தி' என்ருர்கள். 'தன்வினை தன்னைச்சுடும்' என்ருர்கள். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ருர்கள். 'அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்' என்ருர்கள்.

சரியான பாதைக்கு உதாரணமாக ராமனையும், கண்ணனையும் காட்டினுர்கள்.

தவருன பாதைக்கு இலக்கியங்களாக ராவணனையும், துரியோதனனையும் காட்டினுர்கள்.

நமது வாழ்க்கை எத்தனை நாள் ஓடுகிறதோ, அத்தனை நாளுக்கும் நாட்குறிப்பு எழுதி வைத்தது போல் நன்மை, தீமைக் குறிப்பு எழுதி வைத்தார்கள்.

அப்படிச் சிலரை பாரத பூமி பெற்றதனுல்தான்



கண்ணதாசன்

பயங்கர இருளுக்கிடையேயும் ஒரு வெளிச்சம் நமக்குத் தெரிகிறது.

அயோக்கியர்களிடையே யோக்கியர்களையும், துரோகிகளுக்கிடையே நன்றியுள்ளவர்களையும் நம்மால் கண்டுபிடிக்க முடிகிறது.

பற்று, பாசத்தால் பரிதவித்து, சுற்றுச் சூழல்களால் துடிதுடித்து, 'கற்றதும் பயனில்லையே' என்று கதறும்போதும் நம்மைக் கையமர்த்தி, அந்தச் சிக்கல்களிலிருந்து விடுபடுவது எப்படி என்பதையும் அவர்களே தான் நமக்குக்காட்டினுர்கள்.

சிலந்தி வலைபோல் பின்னப்பட்ட லௌகீக வாழ்க்கையில் துன்பங்களை எப்படிச் சமாளிப்பது என்பதையும் அவர்கள்தான் சொல்லித்தந்தார்கள்.

அவர்களது வாழ்நாளில் அவர்களைப் பற்றி உணர முடியாததை அவர்கள் இறந்த பிறகு நாம் உணர்ந்து கொள்ளுகிறேம்.

நல்லவர்களை நாம் அடையாளம் கண்டுகொள்வதற்காகவே அவர்களுக்கும் மரணம் சம்பவிக்கிறது.

வாழ்ந்த நாளில் அவர்களை வசை பாடியவர்கள் கூட, அவர்கள் இறந்த நாளில் அவர்களது நற்பண்புகளை எண்ணிப் பார்க்கிருர்கள்.

அன்ருட நிகழ்ச்சிகளின் மீது ஆத்திரமுற்று அவர்களைத் தாக்கியவர்கள் கூட, அவர்களது மொத்தப்பண்புகளை எண்ணி வியக்கிருர்கள்.

அவர்கள் உலகுக்காகவே வாழ்ந்தவர்கள் என்பதை எண்ணும்போது 'நாமும் அதுபோல் வாழவேண்டும்' என்று சிலராவது எண்ணுகிருர்கள்.

குருடனுக்குக் கிடைக்கின்ற கைக்கோல் ஒரு ஞானியைப்போன்றது, அது அவனுக்கு வழிகாட்டுவதால். எத்தனையோ குருடர்களுக்கு ஒரே கைக்கோல் வழி காட்டுகிறதென்ருல், அது ஞானிக்கும் ஞானியாகும்.

வசிஷ்டர், வியாசர், வால்மீகி போன்றவர்கள் இந்து மதத்தின் பாரம்பரியங்கள்.

அந்தப் பாரம் பரியத்தில் நமது தலைமுறை கண்ட ஒரு ஞானி ராஜாஜி.

தசரதன் இறந்தபோது கதாபாத்திரத்தின் வடிவில் கம்பன் இப்படிப் புலம்புகிருன்:

''நந்தா விளக்கனைய
நாயகனே நானிலத்
தோர்
தந்தாய் தனி அறத்தின்
தாயே தயாநிதியே
எந்தாய் இகல்வேந்தர்
ஏறே இறந்தனையோ?
அந்தோ இனிவாய்மைக்
காருளரே மற்றுலகில்?''

—ஆம்; இது தசரதனுக்கு மட்டுமல்ல, காந்திக்கும் பொருந்தும்; நேருவுக்கும் பொருந்தும் ராஜாஜிக்கும் பொருந்தும்.

உயர்ந்தவர்கள் அனைவரும் ஒரு வரிசை.

அவர்களில் ஒருவருக்குச் சூட்டப்படும் புகழ்மாலை, அனைவருக்கும் பொருந்தும்.

வார்த்தைகளை மாற்றுமல் பெயரை மட்டும் மாற்றினுல் போதும்.

அவர்கள் அனைவரும் ஒரே சீராக வாழ்ந்தவர்கள்.

அவர்கள் மடியும்போது நாம் அழவேண்டியதில்லை;

அவர்களது தலைமுறையில் நாம் வாழ்ந்ததற்காக மகிழ்ச்சியடைய வேண்டும்.

அவர்கள் நமக்காக ஏராளமான நூல்களை வைத்துவிட்டுப்போயிருக்கிருர்கள் என்பதற்காக நாம் பெருமைப்படவேண்டும்.

இந்துமத வேதங்கள் இப்படிச்சொல்கின்றன.

''இறந்து போனவர்களுக்காக அழுதுகொண்டிருப்பவர்கள் கண்ணீரைத் துடையுங்கள்.

இதற்கு நீங்களும் தப்ப முடியாது என்பதை நினைவு கொள்ளுங்கள்.

எழுந்து ஸ்நானம் செய்யுங்கள்.

உங்களது இரண்டாவது வாழ்க்கை ஈஸ்வரனிடத்துத் துவங்கப்போகிறது.

அந்தநம்பிக்கையோடு உங்கள் முதல் வாழ்க்கையை ஒழுங்காக நடத்துங்கள்.''

ஆம்; தெய்வ நம்பிக்கையின் மீது உங்கள் கண்ணீரைத் துடையுங்கள்;

புனிதன் ராஜாஜியின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தியுங்கள்.

'அவரது காலடிச் சுவடுகளில் இருந்து இன்னும் சில ஞானிகள் முளைத்தெழுவார்கள்' என்ற நம்பிக்கையோடு, லௌகீக வாழ்க்கையைத் தொடங்குங்கள்.

# 'தேசியமயம் என்னும் பெயரால் ஓர் இனத்துக்கு அநீதி செய்யாதீர்!'

## இ. தொ. கா. பொதுச் செயலாளர் முழக்கம்!

தேசியமயம் என்ற கொள்கை இடதுசாரிகளுக்கும், இன்றைய அரசாங்கத்திற்கும மட்டும் சொந்தமான சரக்கல்ல. நாமும் அதையே வலியுறுத்தி வந்திருக்கிறேம். அப்படிப்பட்ட நாங்களாதோட்ட சுவீகரிப்பை ஆட்சேபிக்கப்போகிறேம்?

அரசுக்கு உடமையான தோட்டங்களில் பரம்பரையாகத் தொழில் செய்து வந்தவர்களுக்குத் தொழில் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும்; அவர்களுடைய வயது வந்த பிள்ளைகளுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

வெளியாட்களைக்கொண்டு வந்து வேலை கொடுப்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை! ஆனுல் உள்ளே ஒரு சாரார் வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூழ்கடித்துவிட்டு, வெளியாரைத் திருப்திப் படுத்தும் குதர்க்கத்தையே நாம் ஆட்சேபிக்கிறேம்.

இன்று சுவீகரிக்கப்பட்ட தோட்டங்களில் என்ன நடைபெறுகின்றது என்பது தோட்டப் பகுதியில் இயங்கும் எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் தெரியும். அந்தத் தொழிற் சங்கங்கள் எல்லாம் ஒருமுகமான கருத்துத் தெரிவிப்பதை அரசியல் தலைவர்கள் கொஞ்சம் மனிதாபிமானத்துடன் நோக்க வேண்டும்.

தோட்டங்கள் சுவீகரிக்கப்போவதை முன் கூட்டியே அறிந்த இ. தொ. கா. தான் சம்பந்தப்பட்ட அமைச்சரோடும், அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்தது.

அதன் பலனுக ஓரளவு அமைதி நிலவும், தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கவும் வழிகோலியிருக்கிறேம்.

ஆனுல் இன்னும் அத்தொழிலாளருக்குப் போதிய உரிமைகள் வழங்கப்படவில்லை!

மருத்துவ வசதியோ, பிள்ளைகள் கல்வி கற்கவோ, வழக்கம்போல் பங்கீட்டு அரிசியைப் பெற்றுக்கொள்ளவோ முடியாத நிலையில் இருக்கின்றனர்.

13 தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டபொழுது, வேலைத் தலத்திலிருந்த தோட்ட உத்தியோகஸ்தர்களை அழைத்து உடனடியாக வெளியேறும்படி வற்புறுத்தி புண்படுத்தியிருக்கின்ருர்கள்!

ஆக்கிவைத்த சோற்றைக் கூட சாப்பிடாமல் அவசரம் அவசரமாகத் தட்டுமுட்டுச் சாமான்களைக்கூட எடுத்துக் கொள்ள அவகாசமளிக்காது போகும்படி துன்புறுத்தப் பட்டிருக்கின்றனர்!

ஒரு ஜனநாயக நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன!

பாடசாலைக்குச் சென்றிருந்த தங்கள் பிள்ளைகளை இடைவழியில் வைத்து சந்தித்து அழைத்துப்போய் இருக்கிருர்கள்.

தேசியமயம் என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட இனத்தை வஞ்சிக்கவோ, பழிவாங்கவோ செய்தால் அது சோஷலிஸமோ, ஜனநாயகமோ அல்ல. பாஸிச கொள்கைக்கு ஒப்பானதாகும்!

சோசலிசத்தின் பேரால் தோட்டங்கள் அரசாங்க உடமையாகவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையே நமது கொள்கை என்று முழக்கமிட்ட வீடமைப்பு மந்திரி, நிதி மந்திரி ஆகியோர் இன்று அரசவையில் இருக்கும்பொழுது, ஒரு குறிப்பிட்ட தோட்டங்களை மாத்திரம் மட்டும் ஏன் சுவீகரிக்க வேண்டும்?

உண்மையில் இடதுசாரிகள் கூறிவந்தபடி எல்லாத் தோட்டங்களையும் ஏன் அரசாங்க உடமையாக ஆக்கிக் கொள்ளவில்லை?

இது சந்தேகத்துக்குரிய சோஷலிஸமாக வல்லவா தெரிகிறது. இந்நாட்டையே நம்பி வாழும் தோட்டத் தொழிலாளருக்கு சர்வ தேசிய மனிதகுல சட்டத்தின்படி நீதி வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

தொழில் பாதுகாப்பும் தொழில் உரிமையும், ஏனைய வழக்கம் போலிருந்த எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கை.''

—நன்றி: 'காங்கிரஸ்'

## ஐயோ பாவம்! அருளம்பலவா!!

திருக்கேதீச்சரத்தில் 11-12-72ல் கொக்குவில் கோண்டாவில் சைவ அடியார்கள் சோமவார அபிடேகமும் அன்னதானமும் செய்தார்கள். இதற்கு முன்னைய ஆண்டுகளில் விழாச் செய்வதற்குரிய அடியார் வேருெருவராகும்.

இந்த ஆண்டில் தருப்பை அணிந்து கொள்வேன் என்று தம்மைக் காட்ட வந்தார் சிமோல் அருளம்பலம். 5 மெய்காப்பாளர்களோடு அஞ்சி அஞ்சித் திரிந்தார். அங்கு நின்ற ஒரு அடியவரைத் தமது மனைவியிடம் சில்லறைக்காக கொண்டு வரும்படி கூறும்படி கூறினுராம்.

அந்த அடியவர் அதற்கு வேறு ஆளைப்பாரும் என்று அறைந்தாராம்.

பொன்னுலாவ விலங்கையும் மாட்டிக்கொண்டு அன்னுர் அஞ்சி அஞ்சி எத்தனை நாட்கள் திரிவார்?

பௌத்தத்தைப் பேணும் அரசில் ஒட்டிய வண்ணம் இருக்கும் இவர் சைவ விழாத் தருப்பையை அணிய வெட்கம் இல்லையா என்று சைவமக்கள் பலர் பேசிக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் திருநாளில் உறுதியெடுப்போம்!

# தலைவர்கள் தரும் செய்திகள்

காரிருள் அகன்றது; கரும்பனி கழிந்தது—உதய சூரியன் எங்கும் ஒளிபரப்பினன்; உழைப்பின்பயனை அடைந்தனர் உழவர்; அந்த உழைப்புக்கு, உழவுக்கு, எடுக்கின்ற விழா தான் பொங்கல் விழா.

அனல் இன்று ஈழத்திலோ வாழ்க்கைச் செலவு உயர்வாலும், விலைவாசி ஏற்றத்தாலும் வாடுகின்றனர் மக்கள். தமிழினமோ உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு, நசுக்கி அழிக்கப்படுகிறது! இந்நிலையில் இனியும் நாம் பொறுத்திருப்பதோ? அடிமைத்தனத்தை கிள்ளியெறிய உரிமைப் போரில் குதித்திடுவதே நம்கடமை.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடெனும் அடுப்பின் மீது தமிழர் கூட்



டணியெனும் பானையை வைத்து — தன்னலமற்ற உழைப்பு எனும் நெருப்பெரித்து— தியாகமெனும் அரிசியிட்டு — தித்திக்கும் சுதந்திரப் பொங்கலை பொங்கி முடிப்போமென ஹைதை முதல் நாளில் — தமிழர் திருநாளில் உறுதியெடுப்போம்!

— நாவலர் அ. அமிர்தலிங்கம்.

★

பொங்கல் புதுநாளில் தமிழ் மக்கள் எல்லோருக்கும் மங்கலம் பொங்க வாழ்த்துகிறேன்.

பழையன கழிந்து புதியன புகுதல் தமிழர் வழமை.



பொங்கல் புத்தாண்டன்று தமிழினம் தனக்குள் இருக்கும் சுயநலம்' சாதிவேறுபடு, மூடத்தனம், மதவேறுபாடு, பிரதேசவேறுபாடு, போன்ற பழைய குப்பைகளையெல்லாம் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, புதிய நோக்கில், சுதந்திரப் பாதையில் தமிழர் கூட்டணியின் கீழ் மேலும் ஒற்றுமைப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாட்கள் நகர்ந்துகொண்டேயிருக்கின்றன. இனத்தின் விடுதலையை நிலைநாட்ட நாம் துரிதமாகச் செயல்படவேண்டும். தமிழ் மக்கள் தம்முடைய ஐக்கியத்தாலும், ஒற்றுமையாலும், கட்டுப்பாட்டினாலும், தியாகத்தினாலும், தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்ட சங்கற்பம் பூணுகின்ற நாளாக பொங்கல் திருநாள் அமையட்டும்.

— தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம்.



பொங்கல் பொங்குது; தமிழினத்தின் இதயமும் பொங்குது! இராவணன் காலத்துக்கு முன்பிருந்தே இந்நாட்டை ஆண்டிருந்தவர்கள் தமிழர்கள். அத்தகைய தமிழர்கள், இன்று நாட்டில் இழிநிலைக்குத் தள்ளப்பட்டு. தமிழ்மொழி அழிந்தொழிக்கப்படுகிறது, தமிழர் மதப் புறக்கணிக்கப்படுகிறது இதையெண்ணித்தான் தமிழர் உள்ளம் கொதிக்கின்றது.

இந்தக் கொதிப்பை— உணர்ச்சியை ஆற்றுவதற்கு ஒரே வழி தமிழினம் தனது சுதந்திரத்தன்னாட்சியை நிலைநாட்டுவதுதான். இந்த இலட்சியத்துடன் போராடக் காத்திருக்கும் காளையரே! உங்களுக்கெல்லாம் புத்தாண்டில் நிறைய வேலை காத்திருக்கிறது. விரைவில் உங்களையெல்லாம் சந்திப்பேன். பொலிக தமிழர் பொங்கல்!

—அ. தங்கத்துரை.

★



தங்கத் தமிழ் காளையரே, ஒன்று சொல்வேன்! பொங்கல் விழா எடுக்கின்றீர் இன்று! ஆனால் புழுங்குகிறான் தமிழன்னை அடிமைச் சிறைக்குள். கைவிலங்கு அவள் கரத்தில்; அதை அறுத்து — கன்னித் தமிழ்த் தாயை சிங்காசனத்தில் ஏற்றி, கண்ணிறைந்த ஈழத்தில் தமிழர் ஆட்சி கண்டிடுவோம் அந்நாளே பொங்கல் என்பேன்.

அடலேறு மு. ஆலாலசுந்தரம்.

★

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டுழைப்பவர்கள் தமிழ் மக்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்று கூறினார் வள்ளுவர். தமிழர்கள் உழவுக்கும் தொழிலுக்கும் கௌரவமளிப்பவர்கள். அதனால் தான் பொங்கல் திருநா



ளையே கொண்டாடி வருகிறார்கள்.

உதயசூரியன் எழுந்துவிட்டான்—தமிழர்கள் வாழ்வில் இனி இருளில்லை; அடிமை இருளை போக்கி தமிழர் வாழ்வில் உதயசூரியன் இனி ஒளி சேர்ப்பான் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழினம் சுதந்திரம்பெற்று தலைநிமிர்ந்து வாழப்போவது நிச்சயம்!

வாழ்க பொங்கல்! வாழ்க தமிழினம்.

—வவுனியா பா. உ. சே. மா. செல்லத்தம்பு.

★

இஞ்சியும் மஞ்சளும் மணக்க பொங்கல் பொங்கி தமிழினம் மகிழுகின்ற தை முதல் நாளில் இழந்த நம் உரிமைகளையும், இழந்த நம் அரசையும் மீட்டு, தமிழ் ஈழத்தில் தமிழ் அரசு ஒன்றை நிலைநாட்டும் விடுதலைப் போரை துரிதப்படுத்த தமிழ் மக்களும் அவர்களது தலைவர்களும் உறுதியெடுக்க வேண்டுகிறேன்.

—முன்னாள் மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம்

★

பொங்கல் திருநாள் இன்று. ஒவ்வோராண்டும் தான் பொங்கல் வந்து போகின்றது. மங்கி மடியும் தமிழினத்தின் விடுதலையை மீட்டுவரும் பொங்கல் திருநாள்தான் இன்னும் வந்தபாடில்லை.

தமிழர் புத்தாண்டாம் பொங்கள் நாளில் — தியாக உள்ளம் பொங்கட்டும் — உரிமை வேட்கை பொங்கட்டும் — ஒற்றுமையுணர்வும் தமிழின ஒருமைப்பாட்டுணர்வும் பொங்கட்டும்—வீர சுதந்திர உணர்ச்சி பொங்கட்டும்!

இந்தத் தலைமுறையில் — தந்தை செல்வாவின் தலைமையில் இனத்தின் விடுதலையை நாம் நிலைநாட்டத் தவறுவோமாயின் பின்னர் மிகவும் மனம் வருந்த நேரிடும் என்பதை உணர்ந்து தமிழர் கூட்டணியும் வேகமாகச் செயற்படட்டும். தமிழினம் தியாக வேள்வியில் குதிக்கட்டும்!

— அறப்போரணித் தலைவர் அரியநாயகம்

## குமாரசூரியரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டன என்றும் இப்போது அவை அப்படி வழங்கப்படுவதில்லை என்றும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார். இந்தத் தகவலைச் சரியானது என்று மீண்டும் பரிசீலனை செய்துபார்க்குமாறு நான் கௌரவ உறுப்பினரை வேண்டிக்கொள்கிறேன். இது விடயத்தில் எனக்குக் கிடைத்துள்ள தகவல் முற்றும் எதிர்மாறாகவுள்ளது. (தமிழில்)கிடைத்த பற்றுச் சீட்டுக்களைக் கௌரவ உறுப்பினர் என்னிடம் சமர்ப்பிப்பாரானால் நான் முழுவிடயத்தையும் கவனிப்பேன் என அமைச்சர் எனக்கு மறுமொழி தந்தார்.

அன்று அமைச்சர் நான் தமிழிலும் பற்றுச்சீட்டு முதலியவற்றைப் பெற்றேன் என்று கூறியதைக் கேட்டு ஆச்சரியமடைந்தார். பாவம்! சென்ற ஆறேழு ஆண்டுகளாக நாங்கள் தமிழுரிமைக்குப் போராடியதையும் சாதித்தவற்றையும் அவர் அறியவில்லைப்போலும்! அறிந்தால் அவர் இன்னும் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருந்து ஆச்சரியமடையமாட்டார்.

இதோ 1970இல் வெள்ளவத்தை அஞ்சல் நிலையம் எனக்குத் தமிழில் கொடுத்த பதிவுப பற்றுச்சீட்டு என்னிடம் இருக்கிறது. அதன் ஒளிப்படிவச் சுவடி (Photo-stat Cop )யும் இருக்கின்றது. இந்தச் சுவடியை உத்தியோகபூர்வ அறிக்கையில் சேர்ப்பதற்கு இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இந்தப் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்படும் பதில் கடிதம் மாண்புமிகு அ. தொ. அமைச்சருக்கே அனுப்பப்பட்டுள்ளது. எனவே அமைச்சர் இச்சபையில் கூறியது போல இனிமேலாகுதல் தமிழில் பற்றுச் சீட்டுக் கொடுக்குமாறு வெள்ளவத்தை கொழும்பு செயலக அஞ்சல் நிலையங்களைப்பணிப்பாரா?

இன்னும் ஒரு விடயம். கொழும்பு செயலக அஞ்சல் நிலையம் தமிழில் முகவரியிட்ட எனது கடிதத்துக்கு ஆங்கிலத்தில் தந்த பற்றுச் சீட்டும் சிங்களத்தில் தந்த பற்றுச் சீட்டும் இங்கு இருக்கின்றன. ஆங்கிலத்தில் பற்றுச்சீட்டுக் கொடுக்க என்ன விதமான சட்ட உரிமை இருக்கிறது. ஆங்கிலத்தில் கொடுக்கலாம் என்றால் தமிழில் ஏன் கொடுக்க மறுக்க வேண்டும்? இந்தக் கேள்வியிலுள்ள அடிப்படை உரிமையைத்தானும் மாண்புமிகு அமைச்சர் விளங்கிக் கொள்ள முடியாதா?

''உழைப்பாளிகளின் உன்னதத் திருநாள் தைப்பொங்கல் திருநாள். இந்நாளில் ஈழத்தில் வாழும் தமிழர்களின் இதயத்தில் உறையும் இருள் மறைந்து, சுபீட்சமும் நல்வாழ்வும் ஒளிபெற, நாட்டின் வருவாயைப் பெருக்க நாளாந்தம் பாடுபடும் நம் தொழிலாளர்கள் வாழ்வு இந்நாளில் எல்லா வளங்களுடன் சுபீட்சமடைய வாழ்த்துகின்றேன்.''

—மு. பரராஜசிங்கம் பொதுச் செயலாளர் (இ. தொ. கழகம்)

# "கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்வதே எங்கள் கடமை"

## அமைச்சரின் அழைப்பை நிராகரித்து பண்டிதர் அனுப்பியுள்ள பதில்!

'தமிழ் மக்களின் மொழி உரிமை, நில உரிமை, குடியுரிமை, ஆட்சியுரிமைகளைப் பறித்துப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தால் தமிழ் மக்களை அடிமைகளாக்கியுள்ள இந்த அரசாங்கத்தை எதிர்த்து எங்கள் இழந்த உரிமைகளைப் பெறுதற்குத் தொடர்ந்துதமிழர்கூட்டணியும்தமிழ்மக்களும் போராடி வருகிறார்கள் என்பதை இந்நாடு மட்டுமன்றி உலகம் முழுவதும் நன்கறியும்.

'தமிழர் கூட்டணி, தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி விடுத்த ஆறு அம்சக் கோரிக்கைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தொடர்ந்து தமிழ் மக்களை அவமதிக்கும் முறையில் நடக்கும் இந்த அரசாங்கத்துக்குத் தமிழ் மக்களின் வெறுப்பையும் வேதனையையும் கொதிப்பையும் கொள்கையையும் காட்டுதற்காக, இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு வருகை தரும் போது கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்வதெனத் தமிழர் கூட்டணியின் திட்டக்குழு முடிவு செய்துள்ளது.

'இம்முடிவு 13-1-73இல் நடைபெறும் நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் உறுதி செய்யப்பட்ட பின் இம் முடிவின் படி தமிழ்ப் பகுதிகளுக்குவருகைதரும் அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்வது எங்கள் கடமையாகும். எனவே இச் சூழ்நிலையில் உங்கள் அழைப்பை நான் ஏற்றுக்கொள்ள முடியாதென்பது உங்களுக்கும் நன்கு தெரியும்.'

—இவ்வாறு நயினாதீவு துணை அஞ்சல் அலுவலகத்தை அஞ்சல் அலுவலகமாகத் தரமுயர்த்தும் வைபவத்துக்கு தலைமை தாங்குமாறு தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர் விடுத்திருந்த அழைப்பைநிராகரித்து, பண்டிதர் இரத்தினம் அமைச்சருக்கு எழுதியுள்ள பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

### வாழ்த்துக்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'தலைமை' எட்டப்பர்

# 'திக்' விஜயம் வருகிறார்!

சிங்கள ஏகாதிபத்தியத்தின் தொண்டரடிப் பொடியாழ்வாரான தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர் இவ்வாரத் துவக்கத்தில் வட பகுதிக்கு விஜயம் செய்கிறார்!

ஈழத் தமிழினத்தை சிங்கள ஆட்சியாளர்களுக்கு காட்டிக்கொடுத்து நாரை வார்த்து வரும் தலைமை எட்டப்பர்தான் — தலைமைக் கங்காணிதான் — இந்த அமைச்சர் குமாரசூரியர்!

செந்தமிழ் அன்னையின் துகிலுரியும் சிங்களச் சிறுமதி ஆட்சியின் சேலைத்தலைப்பை நக்கி—வந்தேறு குடிகளென வரலாற்றுப் புகழ் கொண்ட தமிழ் மககளை வாயில் வந்தபடி இகழ்ந்துரைத்த வப்பர் ஆட்சியின் தாள் பணிந்து தெண்டனிட்டு — தமிழுக்கும் தமிழினத்துக்கும் தீராத அவமானத்தை இந்நாட்டில் தேடித் தந்து கொண்டிருப்பவர்தான் குமாரசூரியர்!

35 இலட்சம் ஈழத் தமிழினம்-மூண்டெழுந்த விடுதலை உணர்ச்சியினால் ஒன்றுபட்டு ஓரணியில் திரண்டு, மொழி இன உரிமைகளுக்காக நேர் வழியில், அறப்போர் தொடுத்து நிற்கின்ற வேளையிலே குறுக்குவழியில் திடீர் அமைச்சராகி தமிழ்க் குலமழிக்க வந்த ஆட்சியாளர்களின் கைப்பாவையாகி — தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடித்திட முயன்று வருபவர் குமாரசூரியர்!

காலம் காலமாக இந்நாட்டில் வாழ்ந்துவரும் தமிழ்க் குலத்தை—கலப்புச் சாதியென்று நாத்தடிப்புடன் பேசிவிட்டு, தமிழ்க் காளைகள் கொதித்தெழுந்தபோது அப்படித் தாம் பேசவில்லையென்று 'சமாளித்தவர்' தான் இந்தக் குமாரசூரியர்!

பல்கலைக் கழகங்களுக்கு திறமையடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்: இதில் ஏதாவது மாற்றத்தை இந்த அரசு கொண்டு வந்தால் அமைச்சர் பதவியையே உதறிவெறிவேன் என்று வீராவேசச் சபதம் எடுத்துவிட்டு—தரப்படுத்தல் நடைபெற்று பல்லாயிரக்கணக்கான தமிழ் மாணவர்களுக்கு திறமை இருந்தும் இந்நாட்டில் உயர் கல்வி மறுக்கப்பட்ட நேரத்தில்—சொன்னபடி பதவியை உதறித்தள்ளாமல் பதவியில் ஒட்டிக்கொண்டிருந்தது மட்டுமல்ல—

தகுதியும் திறமையும் இருந்தும் கூட தமிழ் மாணவர்கள் புறக்கணித்து ஒதுக்கப்பட்டதற்கு காரணமான தரப்படுத்தல் திட்டத்தை ஆதரித்து நின்று— தமிழ் மாணவர்களின் பல்கலைக் கழகப் படிப்புக்கு குழிபறித்தவர் குமாரசூரியர்!

'வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே வாழுகின்ற தமிழர்கள் வந்தேறு குடிகள்—படை நடத்தி வந்தவர்களின் பரம்பரையினர்' என்று தமிழினத்தை இழித்துரைத்த கும்பலின் இணைபிரியாதோழர்தான் இந்தக் குமாரசூரியர்!

'வெள்ளைச்சாமிக்கும், சுப்பையாவுக்கும் நிலம் தரமாட்டோம் — சிங்களவர்களுக்கு மட்டுமே நிலம் தருவோம்' என்று, பச்சை இனத்துவேஷத்தை கக்கிய ஆளுங்கட்சி உறுப்பினர் விஜயசந்தராவின் அன்புச்சகா தான் இந்த குமாரசூரியர்!

தமிழுக்கு உரிமை கொடுக்காதே என்று வகுப்புவாத ஊர்வலம் வைத்து உயிர்விட்ட சிங்கள பௌத்த வெறியன் இரத்தினசார தேரோவுக்கு கொழும்பில் நினைவுச்சின்னம் திறந்து வைத்துப் பாராட்டிப் பேசிய அரசாங்கத்தின் அமைச்சர்தான் குமாரசூரியர்!

தோசை, வடை நல்லெண்ணெய் என்று தமிழர்களை இகழ்ந்தவர்களின் இணைபிரியாத செல்லப் பிள்ளைதான் செல்லையா குமாரசூரியர்!

தமிழ் மொழியினதும், தமிழர்களினதும் உரிமைகள் அனைத்தையும் மறுத்து சிங்களத்துக்கு மட்டுமே முடிசூட்டி ஆட்சி மொழியாக்கியுள்ள புதிய அரசியல் சட்டத்தை —

தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி — நிரந்தர அடிமைகளாக்கி, நிர்மூலமாக அழித்தொழிக்க வகை செய்யும் புதிய அரசியல் திட்டத்தை —

சிங்களத்தை மட்டுமே தமிழர்களிடம் திணிக்க வழிவகுக்கும் புதிய அரசியல் திட்டத்தை —

பௌத்தத்தை மட்டுமே அரசாங்க மதமாக்கி, ஏனைய சைவ, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத்தவர்களின் உரிமைகளை மறுத்திருக்கும் புதிய அரசியல் சாசனத்தை —

இந்நாட்டுக்காக தங்கள் உதிரத்தை சிந்தி உழைத்து வரும் 15 இலட்சம் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களது பிரஜா

## தன்மானத் தமிழர் குலம்

## தரவிருக்கும் பதிலென்ன?

வுரிமை வாக்குரிமைகளைப் பறித்திருக்கும் புதிய அரசியல் சட்டத்தை —

சிங்கள பௌத்தர்களையே நாட்டின் ஏகபோக எஜமானர்களாக்கி வைத்திருக்கும் புதிய அரசியல் சாசனத்தை —

தமிழ் மக்கள் அனைவரும் எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொண்டு அடிபணிய வேண்டுமென்று பேசிவருபவர் குமாரசூரியர்!

தமிழ் மக்களின் விடுதலை வேட்கைக்கு — உரிமை உணர்ச்சிக்கு — எதிரியாக இன்று செயற்பட்டு வருபவர் — தமிழினத்தை அடிமைப் படுகுழியில் தள்ளி வீழ்த்தி சிங்கள ஆதிக்கவாதிகளின் தாள் பணியவைத்திட சூழ்ச்சி பல செய்துவருபவர் குமாரசூரியர்!

தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய பேரவைப் பிரதிநிதிகளை — தமிழர் கூட்டணிப் பா. உ.க்களை — புறக்கணித்து — அவர்களை மதிக்க மறுத்து — தமிழ் மக்களால் கட்டுப்பணமும் பறிக்கப்பட்டு தேர்தலில் விரட்டப்பட்ட விநோதன், கதிரவேல் போன்றவர்களை கையாட்களாகக் கொண்டு, தமிழ்ப் பகுதியில் தனிக்கூட்டத் தர்பார் நடத்தி வருபவர் குமாரசூரியர்!

இந்தியத் தமிழகத்திலிருந்து, ஈழத்துக்கு, இறக்குமதியாகி வந்த இலக்கிய, சலை, கலாசார சமய சஞ்சிகைகளுக்கு [illegible] தன் மூலம் — [illegible] ளின் வாசிக்கும் உரிமையைப் பறித்தது மட்டுமன்றி — வரலாற்றுக் கெட்டாக் காலத்துக்கு முன்பிருந்தே இருநாடுகளுக்குமிடையே யிருந்து வந்த கலாசார இலக்கிய சமய தொடர்புகளை அறுத்தெறிய முயலுபவர் குமாரசூரியார்!

தமிழ் மக்களுக்கென பூரணத்துவமுடைய ஒரு பல்கலைக்கழகத்தை தருவதாக பத்திரிகைகள் மூலம் பல காலம் கண்துடைப்பு ஏமாற்றுப் பிரசாரம் செய்துவிட்டு முடிவில் தமிழ் மக்களுக்கு ஒரு பெரிய பட்டை நாமம் சாற்றிவிட்டு — இப்போது 'காம்பஸ்' என்று கதையளப்பவர் இந்தக் குமாரசூரியர்!

தமிழ் மக்கள் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு தனிச் சிங்களத்தில் பதில் எழுதி வரும் தபால் அமைச்சுக்கு பொறுப்பானவர்தான் இந்தக் குமாரசூரியர்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத்தை ஆட்சிமொழியாகத் திணித்து—தமிழ் மக்களை அடிமைகளைபோல் சிங்களத்தால் ஆளமுயலுகின்ற ஆட்சியாளர்களின்— தமிழ் இலங்கையில் பௌத்த சிங்கள பாடசாலைகளை நிறுவியும், தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பியும் தமிழ் மக்களை பௌத்த சிங்களவர்களாக்கும் முயற்சியிலீடுபட்டிருக்கும் ஆட்சியாளர்களின் பிரதிநிதிதான் இந்தக் குமாரசூரியர்!

தமிழினம் பெற்றெடுத்த தவக் கவிஞன் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், ஆனந்த விநாயகம் போன்ற விடுதலை வீரர்களை கடந்த ஏழு திங்களாக சிறையில் எதுவித காரணமுமின்றிப் பூட்டிவைத்துக் கொடுமைப் படுத்தும் சிங்கள ஆட்சியின் செல்வப்பிள்ளை தான் செல்லையா குமாரசூரியர்!

இத்தகைய பல 'பெருமைகளை' தன்னகத்தே கொண்ட வீராதிவீரர் சூராதிசூரர் — சாட்சாத் குமாரசூரியர்தான் வடக்கே திக்கு விஜயம் செய்யப் போகிறார்!

1972 மே 22, 23, 24ம் நாட்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கருங்கொடிகள் உயர்த்தி, பாடசாலைகளை மூடி, கடைகளை அடைத்து, தமிழினம் புதிய அரசியல் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது — நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை சிறையில் பிடித்து அடைத்துவிட்டு—கண்டியில் நின்று கால் மடித்து மண்டியிட்டு—தமிழினத்தின் அடிமைச்சாசனத்துக்கு பூப்போட்டு வணங்கியேற்றருளிய குமாரசூரியர்தான் இப்போது யாழ்ப்பாணம் வருகிறார்!

தமிழினத்தின் அரசியல் எதிர்ப்புணர்வால்— விழிப்புணர்வால், வட இலங்கைப் பக்கமே சில காலமாக தலை வைத்துப் படுக்காதவர் இப்போது வடக்கே போகிறார்!

தமிழினத்தின் விடுதலை [illegible] விட்டசென குமாரசூரியர் கருதுகிறார் போலும்! அது உண்மைதானா? தமிழினம் தான் பதில் சொல்லவேண்டும்!

செயல்வீரர் காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் விடாமுயற்சியினால் தரமுயர்த்தப்பட்டதே வேலணை கிழக்கு மத்திய மகாவித்தியாலயம். இதனால் ஏற்படும் பெருமை பண்டிதருக்கே போய்ச் சேரவேண்டியது. ஆனால் பண்டிதரின் புகழுக்குள் தாமும் நுழைந்து பங்கு கேட்க வந்துவிட்டார் குமாரசூரியர்!

வேலணையிலுள்ள சிங்கள சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கையாட்கள் சிலரது உதவியுடன் வேலணை கிழக்கு மத்திய மகாவித்தியாலய தர உயர்வுப் பிரச்சினைக்குள் நுழைந்து தமக்குத் தாமே வரவேற்பு ஒழுங்குகளைச் செய்துகொண்டு வரவேற்புபெற வேலணைக்கு வருகிறார் குமாரசூரியர்! சின்னப்புத்தி படைத்தவர்களன்றி வேறு யாரும் இத்தகைய இழி செயலில் இறங்கமாட்டார்கள்!

எப்படியோ தமிழ்ப் பகுதியில் ஒரு வரவேற்பைப் பெற்று — அதைத் தனது சிங்கள எசமானர்களுக்கு காட்டி, பார், பார், பண்டிதரின் கோட்டைக்குள்ளேயே நான் சென்றுவெற்றியோடு திருப்பிவிட்டேன்; சிங்கத்தை அதன் குகையிலேயே சந்தித்துவிட்டேன்; என்று பம்மாத்துக் காட்டவே குமாரசூரியர் வருகிறார்!

அதுவும் —

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வருகை தரும் அமைச்சர்களுக்கு எதிராக-புதிய அரசியல் திட்டத்தில் தமிழினத்தின் உரிமைகள் அங்கீகரிக்கப்படும் வரை— கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்வது எனும் தமிழர் கூட்டணியின் திட்டக்குழுவின் நிர்மானத்துக்கு பிறகும் —

குமாரசூரியர் திக்கு விஜயம் செய்ய முடிவெடுத்து— வடக்கு நோக்கி வருகிறார்!

மானம், ரோசம், சூடு சொரணை, உரிமை, வேட்கை, விடுதலை உணர்ச்சி— உத்வேக எழுச்சிகொண்ட தமிழினம் என்ன செய்யப் போகிறது?

தலைமை எட்டப்பர்—இருபதாம் நூற்றாண்டு காக்கை வன்னியர் — வருகிறார்! தமிழ்க் குலத்தின் பதில் என்ன?

—எஸ். ஆர். எம்.

# இதோ ஐந்து சவால்கள்!

## ஏற்பாரா சூரியர்?

அமைச்சர் செ. குமாரசூரியருக்கும் தினபதிச் சிவநாயகத்துக்கும் இவர்களின் வாலைப்பிடிப்பவர்களுக்கும் வேலணைத் தமிழரசுக்கட்சிக்கிளை விடுக்கும் சவாலுக்கு மேல் சவால்.

**சவால் 1**

புங்குடுதீவைச் சேர்ந்த திரு. கே. சின்னத்துரை 'சிங்களத்தில் எழுதி ... அனுப்பிய கடிதத்துக்கே சிங்களத்தில் பதில் அனுப்பப்பட்டது' என்று பச்சைப்பொய்யைத் தினபதி 28-11-72 இதழில் வெளியிட்டுள்ளது. காணமற்போன காசுக் கட்டளை சம்பந்தமாகத் திரு. சின்னத்துரை சிங்களத்தில் கடிதம் ஒன்றேனும் எழுதி அனுப்பினார் என்று இவர்கள் நிரூபித்தால் பத்தாயிரம் ரூபா கொடுப்போம். நிரூபிக்க முடியாவிடில் எங்களுக்கு பணம் வேண்டாம் எங்கள் பா. உ. விடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டால் போதும்.

**சவால் 2**

'பண்டிதர் கேட்டார் ஒரு கேள்வி குமாரசூரியர் விட்டார் சவால்' என்று பாவம் குமாரசூரியரை இழுத்து விழுத்திய தினபதியே, தினபதி முண்டு கொடுக்கும் குமாரசூரியரே! தமிழ்ப் பற்றுச்சீட்டைக் காவலூர் பா. உ. காட்டியபின் தமிழிலும் பற்றுச்சீட்டுக்கள் கொடுக்க உம்மால் முடியுமா? செய்வீரா?

**சவால் 3**

தமிழ் மொழி ஒழுங்கு விதிகள் இப்பொழுது தொடர்ந்து நடைமுறையிலிருக்கின்றன என்று தேசிய அரசுப்பேரவையில் குமாரசூரியர் 2-1-73ல் கூறினரே! நாங்கள் அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை என்கிறோம்! நடைமுறைப் படுத்தப்படுகின்றன (Continuing in force) என்பதை நிரூபிப்பாரா?

**சவால் 4**

தமிழில் கொடுக்கப்பட்ட அஞ்சல் பதிவுப் பற்றுச் சீட்டுக்களை நாங்கள் நூற்றுக்கணக்கில் காட்டுகிறோம்! தமிழர்களின் பிரதிநிதியெனக் கூறப்படும் குமாரசூரியர் தமது பெயரில் ஒரு பற்றுச்சீட்டைத் தானும் காட்டுவாரா?

**சவால் 5**

தமிழுக்குக் 'குமாரசூரியர் திட்டம்' வகுத்த அமைச்சர் குமாரசூரியர் தமது சொந்த வேலைகளை இனி மேலாகுதல் தமிழில் எழுதுவாரா? சொந்த அலுவல்களைத் தமிழில் செய்வாரா?

## எப்போது எமதாட்சி?

—செ. குணரத்தினம்

பொங்கல் திருநாளே — உழவன்
புது நாளே
திங்கட் பெருநாளே — எங்கள்
தமிழ் நாளே!
மங்காப் புகழோடு — இந்த
மண்மேலே
எங்கள் தமிழாழும் — நாள்
எந்நாளோ?

உள்ளம் சிரிக்காதோ — வாழ்வு
உயராதோ
நல்ல எதிர்காலம் — நாட்டில்
நிலைக்காதோ
வெல்லத் தமிழாட்சி — இங்கே
நடக்காதோ
சொல்லு தமிழண்டே — எப்போது
எமதாட்சி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் பொங்கிற்று தம்பி!

ஏராளர் தம்மாலே, மாந்தரெல்லாம் சீராளர் ஆயினர் காண் என்று செந்நெல்லும், செங்கரும்பும் செப்பிடும் சீரிய நாள்!

மனை தொறும் மனை தொறும், மயிலும் குயிலும் மானும் உலவிடும் மலர்வன மாகும் மாண்பு பெறும் நன்னாள்!

பசுமையின் பாங்கும் பயனும் பளிச்சிடும் பொன்னாள்!

புதுக்கோலம் காட்டி பூரிப்பை ஊட்டிடும் கண்கவர் வண்ணம் பல எழும் நாள்!

இன்பம் பொங்கிடும் எழிலோவியமாக இல்லமெலாம் விளங்கிடும் விழா நாள்!

பொங்கற் புதுநாள்! தமிழருக்குத் தனிப் பெருந் திருநாள்!

மேலே பார்த்துப் பெருமூச் செறியாது-மேதினியை மறந்து ஏதினி வாழ்வு என்று ஏக்கமுறுது; என் மனை, என் மகவு, என் உழைப்பு, என் உயர்வு, என்று மட்டும் எண்ணிடாது—நம் இல்லம், நம் மக்கள், நம் உழைப்பு, நமது உயர்வு, நம் நாடு, நமது நலன் என்று நயம் கூறி தோழமை வழங்கிடும், தூய்மை துளித்திடும் திருநாள்!

உழைப்போனின் உதிரத்தை உண்டு உருசி கண்டவனும், ஒரு கணம் உள்ளம் தில உணமைக்கு இடமளித்து பெற்றேம் நாம் பெருஞ் செல்வம்: மற்றெதனுல், அவர் உழைப்பதனுல், உழைத்தோர் உருக்குலைந்தார், உண்டநாம் பெருத்துவிட்டோம்! என்றும் இந்நிலைதான் என்றே இறுமாந்து இருந்திடுதல் இனியும் நடவாது — குன்றெடுக்கும் நெடுந்தோள்கள் குலுக்குவது கண்டிட்டோம்.

ஆட்காட்டி விரலுக்கு அடங்கினேர், 'ஏன்' என்று அழுத்தந்திருத்தமாக கேட்டெழுந்தார். அவரவர் உழைப்புக்கு அவரவரே உரிமையாளர் என்றிட்டார்; என்று தனக்குத் தானேனும் தத்துவம் கூறிக்கொள்ளும், புத்தறிவு பூத்திட மெத்தவும் உதவும் மேலான திருநாள்!

பாய்களை புயல் காற்று பிய்த்தெறிந்து விடுமே என்று அஞ்சி, கலம் செலுத்தாமல் கரையில் படுத்துறங்கிக் கிடந்தாரே தமிழன்!

கொல்லும் புலி உண்டு காட்டினிலே என்று தெரிந்தும், உள்ளே சென்று சந்தனம் கொண்டு வராமலா இருந்தான் நமது முன்னவன்!

மூச்சையடக்கி ஆழ்கடலுக்குள் மூழ்கி, ஒரு கரத்தால் சுறாவைத் தள்ளிவிட்டு, மறு கரத்தால் சிப்பியைப் பற்றி எடுத்துவந்தல்லவா, தமிழன் முத்துத் தந்தான்; முத்தனையாளின் முத்தம் பெற்றான்!

வழி வழி வந்த நாம் பானையின் விளைவு கண்டா பயணத்தை விட்டு விடுவோம்!

தம்பி! அதோ உன் அன்னையைப் பெற்றதால் அன்னமென நடந்து, மின்னலிடையுவள், கன்னல் சுவை கொண்ட கனிகளை உனக்கென தட்டிலே வைத்துக் கொண்டு வரும் தாமரையாளைக் கேட்டுப்பார்! குறிக்கோளை மறந்திடலாமா? என்று!

பாவையின் கண்களிலே பயங்கரம் தோன்றும், இங்ஙனம் கேட்டிட எப்ப முடிந்தது உம்மால என்று கேட்டிட மாட்டாள் — ஆனல் அவள் பார்வை நிச்சயம் கேட்டிடும் உன்னை!

பயணத்தில் வெற்றி பெற எவ்வெவ் வழிகளில் ஆற்றல் பெற வேண்டும் என்பதை எண்ணி திட்டமிட்டு பணியாற்றி வரும உன்னிடம் நானேன் தயக்க மடைவோர்; தளர் நடைக்காரர்; துவண்டு விழுவார் ஆகிய இன்ன பிறா பற்றிய பேச்சினைக் கிளப்பிட வேண்டும்? பற்றி எண்ணி ஆயாசப்படப் போவதில்லை நீ உன் ஆற்றலில் எனக்கு மெத்தவும் நம்பிக்கை உண்டு!

நாம் எளியோர்; மறந்தோமில்லை!

நாம் எடுத்துக்கொண்ட செயல் சீரியது—மறவோம் இதனை!

அல்லலும் தொல்லையும்; வறுமையும் நிரம்பிய வாழ்வினராக நம்மவரில் மிகப் பெரும்பாலோர் உளர். இந்நிலையிலே நம்மாலே ஓர் திருநாள் கொண்டாட முடிகிறது.

அறுவடை விழா என்றோம்!

அறுப்பவன் ஒருவன்!

அனுபவிப்பவன் வேறொருவன்!

இந்நிலை குலையவில்லை இன்னும்.

நம்நாடு வளம் பெறுவதற்கான வழிவகைகளாம் உரிமை கண்டிட்டால், கூனல் நிமிர்ந்திடுவான். கூப்பிப்பிழைப்போன் மனிதனவான். மங்கிய கண்களிலே ஒளி பிறக்கும்; நரம்பு புதுப்பிக்கப்பட்ட வீணை காண்போம், கானம் எழும், மாசு துடைக்கப்பட்ட மணியிலிருந்து ஒளி கிளம்பும், விழாக்கோலம் நாடெங்கும்! கார் கண்டால் கலாபம் விரித்தாடும் மயில் போல — இத்திருநாள் காணும்போது தமிழரின் உள்ளத்தில் உவகை பிரிடக் காண்கிறோம்.

இத்தலைக்கும், விளக்கு வரிசைகளோ -மணியோசைகளோ—காது குடைந்திடும் வேட்டுச் சத்தமோ — வீண் ஆரவாரமோ இருப்பதில்லை இந்த விழாவில்-இதயகீதம் மெலோசை எழுப்பி, நம் உழைப்பின் வெற்றியை மௌனமாக எண்ணிப் பார்த்து பூரிப்படையச் செய்கிறது இவ்விழா!

பொங்கலோ பொங்கல்! என்று இல்லத்துளார் எழுப்பிடும் குரலொலி இன்னிசையாகிறது.

பொங்கிற்று பால்! தம்பி! எனப்பாங்குடன் கேட்டு மகிழ்ந்திட இப்பொங்கல் விழா பயன்படுகிறது. நாட்டிலே மனைகள் பலப்பல இருப்பது தோட்டத்திலே பலப்பல மலர்ச்செடிகள் இருப்பது போல, எல்லாவற்றிலும் நறுமணம் எழுந்தால் பொழில் முழுவதும் மணம் நிரம்பும்!

விடெங்கும் விழா விருந்தால் — நாடே விழாக் கோலம் காட்டும்!

இன்பம் சில இல்லங்களிலும், இருள் பலவற்றிலும் இருந்தால், அது எருக்கஞ்செடிகள் நிறைந்துள்ள காடதனில் இங்கொன்றும் அங்கொன்றுமாக இஞ்சியும் மஞ்சளும் இருத்தல் போன்றதாகும்!


எனவே தம்பி! பால் பொங்கிற்று? எனக் கேட்கும் இதே வேளையில்-பிற இல்லங்களிலும் -பொங்கிற்று அந்தப்பால் என்று எண்ணிப்பார்த்திட, இல்லையெனில், அதன் காரணத்தை அறிந்து உணர்ந்து—தமிழகம் ஒரே 'குரலில் பால் பொங்கிற்று' எனக் கூறிடும் ஓர் நிலையைக்காண உன்னையும், உன் உழைப்பையும் தருவாய் என்று நம்புகிறேன். உன்னையன்றி யான் வேறெவரை நம்பி இப்பணியினை ஒப்படைக்கப் போகிறேன். எனக்கு வேறு எவருளர்?

## அமரர் அண்ணா

உன் தகுதி நானறிவேன்! உன் ஆற்றல் நான் கண்டிருக்கிறேன. நாடு அதனைத் தக்க விதத்தில், மெச்சத்தக்க முறையில், உருவான பலன் கிடைக்கத்தக்க அளவில் காணவேண்டும், பிறகென்ன; வெற்றிதான்!

மலையளவு மதக்கரியை அடக்குபவன் அதனினும் பெரிய உடலளவா கொண்டுள்ளான்?

மார்பிலே பாய்ந்து குருதியை வெளிக்கொண்டு வருகிறதே அம்பு — அதன் முனையிலே உள்ள இரும்பின் கூர்மை எத்துணை சிறியது! அளவில்! எனவே அளவு



## அண்ணா உனக்கோர் அப்பீல்! —(2)

— வட்டூர்ப்பங்கயமணாளன்

ஒரு வருடம் தமிழகத்தின் முதல்வனாய்!
ஒளி நிறைந்த நாளண்ணா உனது வாழ்வில்
அருகினிலே நாமிருந்தும் தலைநிமிர்ந்தோம்!
அண்ணன் நீ இருக்கின்றாய் என்ற அந்தப்
பெரு நினைவில் அச்சமின்றி நடையயின்றோம்!
உனது தமிழ் ஓங்கியது; தாழுயர்ந்தோம்
திரு திருவென் றேமுழித்தார் பகைவர் கூட்டம்
இனித்தமிழன் தலைகுனியான் என்றும்சொன்னர்!

உலகத்தில் எங்கெல்லாம் தமிழர் வாழ்ந்தும்
ஒரு தமிழன் உரிமையுடன் வாழ்ந்ததில்லை
உலகப் படத்தினிலே தமிழ் நாடென்று
ஒரு நாடு இருந்ததில்லை; உற்றுப்பார்த்தால்
மலகூடம், மதிற் சுவரிற் கரிக்கோல்கொண்டு
தமிழ் நாடு என்றெழுதியிருத்தல் கண்டோம்
சில நாளில் உன்கழக ஆட்சிதன்னிற்
செழித்ததே தமிழ்நாடு நாணியெல்லாம்!

கொக்கரித்தோர் கோழிகளாய்த் தமிழகத்தின்
கொள்கைகளைக் கேட்க விடாதெங்கள் காதிற்
தக்கையிட வேண்டுமெனத் தடைகளிட்டார்
தரமான நூல்களைத் தடுத்துப்பார்த்தார்
பக்கத்து வீட்டினிலே குடியிருக்கும்
தங்கையினை மறந்துவிடச்சொல்லி எங்கோ
சொர்க்கத்துச் சுரக்கெல்லாம் இறக்கும் சேவை
மேற்கொண்டோர் உன் ஆட்சிவளரல் கண்டே!

அந்த நிலை சாகுதண்ணா! தமிழன் செத்தான்!
அன்னைதமிழ் அழுகின்றுள்! கழக ஆட்சி
மாந்த நிலையடைந்ததென மாற்றான் முன்னே
தம்பியரே மண்டியிடும் நிலைமைபாச்சு
சொந்தச் சகோதரர்கள் பகைத்தல் கண்டு
சுரண்டுகின்ற பேர்வழிகள் தலைநிமிர்ந்தார்
எந்தச் சுரத்தினை [illegible] உண்டோ?
நெஞ்சைப் [illegible]

## திடீர் அமைச்சர் குமாரசூரியரை சந்தி சிரிக்க வைத்தது 'சிந்தாமணி'!
## அரசியல் "ஸ்டண்ட்" அம்பலம்!

தினபதியும் சிந்தாமணியும் சென்ற ஒரு மாதமாக ஒவ்வொரு கிழமையும் கொட்டை எழுத்துக்களில் அமைச்சர் குமாரசூரியரைச் சவால் விடும் சண்டியனுக—பேரிடி கொடுக்கும் வீரனுக பொல்லடிகொடுத்தவரிடம் புகழ்மாலை பெறும் பூமானுகக்காட்ட முற்பட்டு மூக்குடைபட்டன; சும்மா கிடந்த 'சூரியரை' சந்தி சிரிக்க வைத்து விட்டன.

றப்பர் பலூனுக்கு அளவுக்கு மிஞ்சி காற்றூதினல் வெடித்து விடும். பின் அதை வைத்து விளையாடவும் முடியாது வயிற்றுப்பிழைப்பு நடத்தவும் முடியாது. கழுதைக்கு யார் சேணங்கட்டினலும் அதைக் குதிரையாகக முடியாது!

தினபதி சிந்தாமணியில் பத்திரிகைகளின் முதல் ஸ்டண்டு: அமைச்சர் குமாரசூரியர் பேரிடி கொடுத்தார் என்பது. புங்குடுதீவைச் சேர்ந்த திரு. கே. சின்னத்துரை சிங்களத்தில் எழுதி ஆங்கிலத்தில் கையொப்பமிட்டு அனுப்பிய கடிதத்துக்கே சிங்களத்தில் பதில் அனுப்பப்பட்டது'' என்று தினபதி ஈனக்குரலில் 28-11-72 இதழில் எழுதியுளது.

திரு. சின்னத்துரை சிங்களத்தில் கடிதம் (letter) எழுதினர் என்று தினபதிச் சிவநாயகமோ அமைச்சர் குமாரசூரியரோ நிரூபிப்பார்களா? நிரூபிக்க முடியாதெனருல் பகிரங்க மன்னிப்புக்கேட்பார்களா?

சிவநாயகத்தின் இரண்டாவது 'ஸ்டண்டு' 'பண்டிதர் கேட்டார் ஒரு கேள்வி—குமாரசூரியர் விட்டார் சவால்;''—என்பது.

பண்டிதர் பற்றுச்சீட்டைக் காட்டினரே! குமாரசூரியரை இடித்திடித்து வாட்டினரே! அப்பிழுத்த குரங்குபோல் மாட்டிக் கொண்ட தினபதியே உன் மன்னிப்பு எங்கே!

மூன்றாவது "ஸ்டண்டு" 'போர்தொடுத்தவரே புகழ் மாலை சூட்டினர் என்று அங்கலாய்த்தாயே! சிவநாயகமே — '[திரு. இரத்தினம் தேசிய அரச பேரவையில் பேசியவற்றை இங்கே அப்படியே பிரசுரிக்கிறோம்'' என்று எழுதிய நீயே அவர் பேசித்த இடையிடையே விளக்கிப்பேசிய 'அரசியல் சூதாட்டமா? என்ற கடிதத்தை — அப்படியே பிரசுரிக்காமல் இருட்டடிப்புச் செய்தாயே! இது உன் வழக்கமான பத்திரிகைப் பரதத்தனம் தானே. இக்கடிதத்தை நீ வெளியிட்டால் அமைச்சர் குமாரசூரியரின் அரசியல் சூதாட்டமும் நீ கெடுத்த திரு. நவரத்தினத்தின் 'திருவிளையாடலும் அம்பலமாகி விடுமென்று குலை நடுங்கி விட்டியே!

திரு. குமாரசூரியர் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிப்பேசினர். சபாநாயகா ஒழுங்குப் பிரச்சினையை ஏற்கவில்லை—இதையும் ஏன் இருட்டடிப்புச்செய்தாய் 'officially' என்ற சொல்லை வேண்டுமென்றே தமிழில் மொழி பெயர்க்காமல் விட்டாய்? குமாரசூரியர் ''நல்லநோக்கத்தோடு உதவி செய்தால்' என்று கூறியதையும் இருட்டடிப்புச்செய்து விட்டாயே!

திரு. இரத்தினத்துக்கு அமைச்சர் உதவி செய்யவில்லை உபத்திரவம் செய்திருக்கிறர். நல்ல நோக்கத்தோடு செய்யவில்லை கழுத்தறுப்பு நோக்கத்துடன் செய்திருக்கிறர். தினபதியே சுட்டிக்காட்டியதுபோல திரு. இரத்தினத்தின் ஊரிலே அவரைப்புறக்கணித்துத் தாம் வரவேற்புப்பெறுதற்குச் செய்திருக்கிறர். இதைத்தான் திரு. இரத்தினம் 'அரசியல் ஸ்டண்டு' என்று தேசிய அரசுப் பேரவையில் சுட்டிக்காட்டினர். அமைச்சரின் அரசியல் ஸ்டண்டை உனது பத்திரிகை ஸ்டண்டு அம்பலப்படுத்தி விட்டதே!

## தாயும் தாய் மொழியும்!

தாயை வணங்காதவன், அவன் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் ஏமாற்றுக்காரன். எந்த மொழியாக இருந்தாலும் தன் மொழியை வணங்காதவன் நாதியற்றவன்.

—எம். ஜி. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12வது வெற்றி வாரம் வெள்ளி விழா சித்திரம்

செண்ட்ரல் (மருதானை) ஜோதி (திருமலை) ராணி (யாழ்ப்பாணம்)



- சிவாஜி கணேசன்
- ஜெயலலிதா
- மனோரமா
- எம். ஆர். ஆர். வாசு
- வீ. கே. ராமசாமி, சுபா நடித்த

# பட்டிக்காடா பட்டணமா

டைரக்ஷன்: பி. மாதவன் பாடல்கள்: கண்ணதாசன் இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

சிரி சிரி எனச் சிரிக்கவைக்கும் முழுநீள ஈஸ்ட்மன் வண்ண ஹாஷ்ய சித்திரம் காட்சியளிக்கிறது

# செல்லமகால்

இம்பீரியல் [மட்டுநகர்] ஆகிய திரைகளில்



ரவிச்சந்திரன் - காஞ்சனா, நாகேஷ்

ரமாபிரபா, மூர்த்தி - மாலி விஜய சந்திரிகா நடித்த—

ரசிகப் பெருமக்களுக்கு எமது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துகள் சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனம்

உத்தரவின்றி

சித்திராலயாவின்

உள்ளே வா

கெயிட்டி - 46வது தினம்

# இருளும் ஒளியும்

ரசிகர் பெருமக்களுக்கு சினிமாஸ் ஸ்தாபனத்தாரின் உள்ளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

ஷாஜகான் இறந்துபோன தன் காதலிக்கு நினைவுச் சின்னமாக தாஜ்மஹாலைக் கட்டினன்! ஒரு காதலன் உயிருள்ள தன் காதலிக்கு அன்புச் சின்னமாக விலைமதிக்க முடியாத ஒரு

"வசந்தமாளிகை"யை

உருவாக்கினன்! திரையுலகில் என்றும் நீங்காத நினைவாக!!

கெப்பிட்டல் பிளாஸா

(கொழும்பு) (வெள்ளவத்தை)

வெலிங்டன் லிடோ

(யாழ்ப்பாணம்)

ஷாஜகான் கட்டிய தாஜ்மகால் உலகின் அதிசயங்களில் ஒன்று! ஆனந்த் கட்டிய மாளிகை திரையுலகில் ஓர் புதுமை!!

இசை: திரையிசைத் திலகம் K. V. மகாதேவன், டைரக்ஷன்: K. S. பிரகாஷ்ராவ்.



நடிகர் திலகம்

சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ

பாலாஜி, சாந்தகுமாரி, லீலா, நாகேஷ், பண்டரிபாய், பத்மினி, சுந்தரராஜன், ரமாபிரபா, புஷ்பலதா ஸ்ரீகாந், சுகுமாரி, பிரேமா, ரங்கராவ், கவிதா, C. K. சரஸ்வதி T. K. பகவதி, V. S. ராகவன், S. V. ராமதாஸ், V. K. ராசமசாமி,

— நடித்த —

விஜயா சுரேஸ் கம்பைன்ஸ்

# வசந்த மாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

தயாரிப்பு: D. ராமாநாயுடு, ஒளிப்பதிவு: A. வின்செண்ட், பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்.

கிங்ஸ்லி (கொழும்பு) ஜெய்சங்கர், லட்சுமி — நடித்த — கருந்தேள்கண்ணாயிரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஜனவரி மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.